# சங்க இலக்கியத் தொன்மை அகச்சான்றுகள்

தமிழண்ணல்

# சங்க இலக்கியத் தொன்மை

## அகச்சான்றுகள்

தமிழுண்ணல்

சங்க இலக்கியத் தொன்மை: அகச்சான்றுகள்
© முனைவர் இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்)
முதற்பதிப்பு: நவம்பர் 2008
விலை: ரூ. 60

அச்சு: பேஜ் அஃப்செட், 12 நடேசன் சாலை, சென்னை 600 005

*சங்க இலக்கியத் தொன்மை: அகச்சான்றுகள்*

புதிய சான்றுகளுடன்...
சங்கப் பாடல்கள் கி.மு. ஐந்து, நான்காம் நூற்றாண்டுகளிற் பாடப்பட்டவை என்பதை நிறுவ, அனைவரும் ஏற்கத் தக்க சான்றுகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. அகச்சான்றுகளில் மிகக் குறிப்பிடத் தக்கவற்றை, ஓரிடத்துத் தொகுத்துத் தந்திருப்பது, சங்கப் பாடல்களின் கால ஆய்வாளர்க்குப் பயன்படும்.

9380626448

நோக்கு
4.1083 நேரு நகர்
2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம்
சென்னை 600 096

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 05 |
| 1 | தொல்காப்பியம்: பனம்பாரனார் பாயிரம் | 07 |
| 2 | இறையனார் அகப்பொருளுரை | 10 |
| 3 | சிலப்பதிகாரம்: அடியார்க்கு நல்லார் உரை | 15 |
| 4 | புறநானூறு | 17 |
| 5 | கலித்தொகை | 20 |
| 6 | சிலம்பு: கயவாகுமன்னன் | 23 |
| 7 | பாரதப்போர் | 24 |
| 8 | சிபிச்சக்கரவர்த்தி | 26 |
| 9 | இராம கதை | 28 |
| 10 | காப்புணர்ச்சி | 31 |
| 11 | இந்திய ஒருமைப் பார்வை | 36 |
| 12 | சிலம்பு: நூற்றுவர் கன்னர் | 41 |
| 13 | நந்தர்கள் | 43 |
| 14 | பாடலிபுத்திர நகரம் | 47 |
| 15 | மோரியர் | 52 |
| 16 | யவனர் | 60 |
| 17 | தமிழர்களின் கடல் வாணிகச் சிறப்பு | 62 |
| | தொகுப்புரை | 70 |
| | ஆசிரியர் குறிப்பு | 75 |

# அணிந்துரை

பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்கள் நாடறிந்த நற்றமிழறிஞர்; நாட்டுக்கு அப்பாலும் நன்கு அறியப்பட்ட அருந்தமிழறிஞர்; அறிஞர்கள் மதிக்கும் அறிஞர்; தமிழ்ப் பேராசிரியப் பெருமக்கள் போற்றும் பெரும் பேராசிரியர்.

ஒரு பள்ளியின் சாதாரண ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், ஒரு பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியராகவும் தலைவராகவும், முதல் தேசியத் தமிழ்ப் பேராசிரியராகவும் படிப்படியாய்த் தமது உழைப்புத் திறத்தாலும் புலமை வளத்தாலும் பண்பு நலத்தாலும் உயர்ந்த பெருமகனார் அவர். ஐம்பதிற்கும் மேற்பட்ட அரிய நூல்களின் ஆசிரியரான அவர், ஆய்வியல், ஒப்பியல், இலக்கியக் கொள்கையியல், தமிழ் இலக்கிய வரலாற்றியல் முதலிய புதிய துறைகளைத் தமிழுக்கு அறிமுகம்செய்த முன்னோடிகளுள் முன்னணியில் உள்ளவர் அவர். நாற்பதிற்கும் மேற்பட்டோர் முனைவர் பட்டப் பேறு எய்திட நெறியாளராகத் துணைநின்றவர் அவர்.

ஒல்லும் வகை எல்லாம் தமிழுக்குத் தொண்டு புரிவதில் தம்மை ஒப்படைத்துக்கொண்ட அவர், தமிழுக்கு ஊறு நேரும் நிகழ்வு எங்கு, எப்போது, எவ்வடிவில் நிகழ்ந்தாலும், உடனே கொதித்தெழுந்து அதனை வன்மையாகக் கண்டிக்கும் போர்க் குணம் படைத்தவர். இந்நக்கீரத் துணிச்சல் பேராசிரியர் தமிழண்ணலின் தனி அடையாளம். அவரைப்போல் இத்தகைய பொதுநோக்கு உடையவர்கள் தமிழுலகிற்கு முன்பு எப்போதையும்விட

இப்போது அதிகம் தேவை. பன்முக ஆளுமையினராம் அவர் குறித்து இன்னும் சொல்லிக்கொண்டே செல்லலாம். விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்.

பழந்தமிழ்ப் பனுவல்களினின்றும் அரிதின் முயன்று தொகுத்த அரிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, ஆழ்ந்து ஆய்ந்து, தனித் தன்மையுடை சங்க இலக்கியங் களின் நனி தொன்மையினை அறுதியிடும் ஆணித்தரமான ஆதாரங்களைப் பேராசிரியர் தமிழண்ணல் இந்நூலில் முன்வைத்துள்ளார். சங்கப் பாடல்கள் கி.பி. ஐந்து, நான்காம் நூற்றாண்டுகளில் பாடப்பட்டவை என்பதை நிறுவ, அனைவரும் ஏற்கத்தக்க சான்றுகளை இந்நூலில் அவர் அளித்துள்ளார். மிகவும் இன்றியமையாது குறிப்பிடத்தக்க அகச் சான்றுகளை ஒருங்கே தொகுத்து ஓரிடத்தே அவர் தந்திருப்பது சங்கப் பாடல்களின் கால ஆய்விற்குப் பெரிதும் பயன்பட வல்லது. இந்த அகச்சான்றுகளும் புறச் சான்றுகளும் ஒன்றையொன்று வலுப்படுத்தும் வகையில் அமையும்போது சங்கப் பாடல்களின் கால வரையறை துல்லியமாகத் துணியப்பெறும். இந்நோக்கிலான ஆய்வுகள் காலத்தின் தேவை ஆகும். அத்தகு ஆய்வுகளுக்கு உந்து விசையாக இந்நூல் உதவும் என்பது உறுதி.

தமிழ் அறிஞர் உலகம் இத்தகைய நன்முயற்சிகளை வரவேற்க வேண்டும்; ஊக்குவிக்க வேண்டும்; போற்ற வேண்டும் என்பது எனது விழைவு.

பேராசிரியர் தமிழண்ணல் அவர்களுக்கு எனது பாராட்டும் வணக்கமும் உரியன.

அன்புள்ள,

வ. ஜெயதேவன்
தகைசால் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை 600 005

# 1

## தொல்காப்பியம்:
## பனம்பாரனார் பாயிரச் சான்று

வடவேங்கடம் தென்குமரியாற்றிடையே தமிழ் பேசும் நல்லுலகம் உளது. அங்குள்ள உலக வழக்கையும் இலக்கிய வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு, எழுத்தும் சொல்லும் பொருளும் ஆகிய மூன்றையும் ஆராய்ந்து எழுதியது தொல்காப்பியம். இத்துடன் முடியாது, பிறிதொரு நிலம் ஏன் கூற வேண்டும்?

**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலந்தொகுத்தோனே போக்கறு பனுவல்...**

இதில் முந்துநூல்கள் வழங்கிய நிலம் ஒன்று தனியே குறிக்கப்படுகிறது. புலந்தொகுத்தல் என்பதும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியது.

அதற்கேற்ப தொல்காப்பியத்தை எழுதத்தூண்டிய நிலந்தருதிருவிற் பாண்டியன் என்ற காரணப் பெயரும் கருதத்தக்கதாகும்.

**கடல் கொள்வதன் முன் பிற நாடும் உண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது**

என்பது இளம்பூரணம்.

**குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது**
**நாடு கடல் கொண்டதாகலின் கிழக்கும்**

**மேற்கும் கடலெல்லையாக முடிதலின்**
**வேறெல்லை கூறாராயினார்**

என்பது நச்சினார்க்கினியம்.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தில் கடல் சுவற வேல்விட்ட படலம், வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம், எனப் பாடியுள்ளார். அவருக்கு முன்னவரான வேம்பத்தூரார் கடல் சுவற வேலெறிந்த திருவிளையாடல் என இதே செய்தியைப் பாடியுள்ளார். இவை இரண்டற்கும் மூலமான, கல்லாடத்தில்,

**கடல் சுவற வேலெறிந்தது**

என இது குறிப்பிடப்படுகிறது.

இவை அனைத்திற்கும் மூலமாகவும் முன்பாகவும் சிலப்பதிகாரத்தில், இச்செய்தி வருகின்றது.

**அடியில் தன்னளவு அரசர்க்குணர்த்தி**
**வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**
**பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி** (11)

என்று குறிப்பிடுகிறது.

கலித்தொகையில்,

**மலிதிரை ஊர்ந்து மண்கடல் வெளவலின்**
**மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்**
**புலியொடு வில் நீக்கிப் புகழ்பொறித்த கிளர் கெண்டை**
**வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்** (104)

என வருவதும் இவண் ஒப்பிடற்பாலதாகும்.

மேலும், சங்கப் பலகை தந்தபடலம், தருமிக்குப் பொற்கிழியளித்த படலம், கீரனைக் கரையேற்றிய படலம், கீரனுக்கு உபதேசித்த படலம், சங்கத்தார் கலகந்தீர்த்த படலம், இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலம் என்பன பலவும் தமிழ்ச் சங்கத் தொடர்பான பழங்கதைகளின் வழிவந்தவையாகும்.

இவை போல வருவன ஏனைய கல்லாடம், நம்பி திருவிளையாடல்களில் மட்டுமன்றி,பிற பலநூல்களிலும் குறிப்பாக இடம்பெறுகின்றன.

இத்தகைய தொன்மக் கதைகள் நேரடி உண்மை யல்ல: ஆயினும் மறைமுகமாக அறிய வேண்டிய, தொல்பொருள் ஆய்வுபோன்ற உண்மைகள் எனக் கூறுவதைக் கருதாமல், இவை 'கட்டுக்கதைகள்' என்பார் நடுநிலையாளரல்லர்.

# 2

# இறையனார் அகப்பொருள் உரை

காலத்தால் முற்பட்டது இறையனார் அகப் பொருளுரை. அதனை எழுதியவர் நக்கீரர் என்ற கருத்து உண்டு. முச்சங்கம் பற்றிய செய்தியை அதுவே முழுமையாய்த் தருகிறது.

> தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த குமர வேளும், முரஞ்சியூர் முடிநாக ராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்ட நாலாயிரத்து நாற்பத்தொன் பதின்மர் பாடினார் என்ப.

இவ்வாறு தொடங்கி அவர்கள் பாடியதாகப் பரி பாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் எனவும், சங்கம் நிறுவிய மன்னர்கள் காய்சின வழுதி முதலாக கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்றும் கூறுவதுடன், அவர்கள் சங்கமிருந்து தமிழர் ஆராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை என்ப என்றும் அவருக்கு நூல் அகத்தியம் என்றும் முடிகின்றது.

> இனி இடைச்சங்கமிருந்த அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோனும், கீரந்தையும் என இத்தொடக் கத்தார் ஐம்பத்தொன் பதின்மர் என்ப.

நூல்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமும் என இவை என்ப.

சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன் பதின்மர் என்ப.

அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் மருதனிள நாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரனாருமென இத் தொடாக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் பாடினர் என்ப.

நூல்கள்: நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்று இத்தொடக்கத்தன.

அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப.

அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப் பட்டுப்போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப.

அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப.

இவை யாவும் செவிவழிச் செய்திகளே என்பதை, இதில்வரும் சொல்நடையே காட்டுகிறது.

என்ப, என்பர் என்றும் அவர்களால் பாடப் பட்டன எத்துணையோ என்றும் கடல் கொள்ளப்பட்ட

மதுரை என்ப · அக்காலத்துப் போலும் மதுரையைக் கடல் கொண்டது என்றும் இவ்வாறு வருவன இவை செவிவழி கேட்கப்பட்டவை என்பதை நிறுவுகின்றன.

சங்கமிருந்ததை மறுப்பவர்கள் ஆண்டு எண்ணிக் கை முதலியன நம்பவியலாதவை என்றும் சங்கம், மதுரை என்ற சொற்கள் தாமும் தமிழல்லவே என்றும் வாதிடுவா. இறையனார் அகப் பொருளுரை பத்துத் தலைமுறைக்குச் சொல்லப்பட்டு, வாய்மொழியாகவே முழுநூலும் கேட்கப்பட்டு, இறுதியில் ஏடுகளில் எழுதப்பட்டதை விரிவாகக் கூறுகிறது.

அக்காலத்தில் இத்தகைய உரைகள் வாயால் பாடம் சொல்லப்பட்டவை - மாணாக்கர்க்கு உரைக் கப்பட்டவை. முழுநூலையும் நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் அன்று இருந்தது. இது வடமொழி நூல்களுக்கும் பொருந்தும்.

இறையனாரகப் பொருள் உரையிலேயே, 'உரை நடந்துவந்த முறை' கூறப்படுகிறது:

> மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் மணலூரா சிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்கு மார னார்க்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத்தா சிரியர்க்கு உரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீல கண்டனார்க்கு உரைத்தார்; இங்ஙனம் வருகின்றது உரை. (சூ. 1).

இவர்கள் அனைவரும் பாடங்கேட்டுப் படித்தவர் களாதலின், இப்பெயர்கள் வேறு இடங்களில் கேள்விப் படாதவை.

பழங்காலத்தில் இலக்கிய, இலக்கண நூல்கள் முன்னதாக ஏட்டில் எழுதப்பட்டன. அவ்வேடுகள் ஒன்றிரண்டே, அதைக் கொண்டு, பாடம் உரைப்பவர் வாய்மொழியாக விளக்கம் சொல்வார், இதனாலே தான் அவை 'உரை', எனப்பட்டன. பத்துத்தலை முறையாக வந்தபோது, அவ்வக் காலச் சொற்களைக் கலந்தும் கூறலாயினர். கதை, கற்பனைகளும் சேராது இரா. அவையம் என்பதைச் சங்கம் என்றனர், மதுரையும் திருமருதமுன்துறைப் பெயர் மருவியதா - மதிரை என்பதன் திரிபா எனப் பலவாறு ஆராயப் படுகின்றன. (மதில்சூழ் மதிரை)

மதுரையைச் சுற்றிலும் மிகப்பெரிய கோட்டையும் கோட்டை வாயிலும் இருந்தன. 'ஆலவாய்' என்றால் மிகப்பெரிய வாயில் - கோட்டைவாயில் என்றே பொருள். வான்மீகி முனிவர் இராமாயணத்தில் இக்கோட்டை வாயிலை, மிகப் புகழ்ந்து, இதைக் 'கவாடபுரம்' எனக் குறிப்பிடுகின்றார். கவாடம் - கதவு, வாயில். ஆலவாயில் என்பதின் வடமொழி ஆக்கமே அது.

மிகப் பழங்காலத்தே புத்தசமயம் இங்கே பரவியபோது. 'சங்கம் சரணம் கச்சாமி' எனச் சங்கமும் பெரும்புகழ்பெற்றது. அதன் தாக்கத்தால் 'அவையம்' சங்கம் என அழைக்கப்படலானது. இவை புணர்ப்பு, அவையம், கூடல், தீந்தமிழின் துறை, தொகை என்றெல்லாம் அழைக்கப்பெற்றுள்ளது. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், வச்சிரநந்தி என்ற சமண முனிவன், தாங்களும் தமிழ் வளர்த்தாலன்றிப் பொதுமக்களிடம் தங்கள் மதத்தைப் பரவச்செய்ய முடியாத நிலையில், 'சங்கம்' என ஓரமைப்பைத் தோற்றுவித்தான். இதனால் பெயர்

மாற்றம் நிலைத்துவிட்டது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகள்,

நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன்காண் (676)

என்று பாடினார்.

இறைவனே தமிழாராய்ந்தான் என்பனஎல்லாம் மக்கள் நம்பிக்கையே. இது உலகெங்கும் உண்டு. இறையனார் அகப் பொருட்செய்திகள், தமிழ்நூல்கள் பலவற்றில் விரவிக் கிடக்கின்றன. மக்கள் தொன்று தொட்டு வழங்கிவருவனவற்றிலும் நம்பிக்கைகளிலும் ஐயப்பட்டு, அவற்றிலுள்ள அடிப்படை உண்மையை மறுப்பது அறிவுடைமையாகாது.

கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
மண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?
(திருநாட்டுப்படலம் 57)

என்று பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணத்தில் பாடுகிறார்.

கம்பர் பெருமான்

நிழற்பொலி கணிச்சி மணிநெற்றி உமிழ் செங்கண்
தழல்புரைசுடர்க் கடவுள் தந்ததமிழ் தந்தான் (2671)

என்று பாடியுள்ளார்.

இவை தமிழ் நூல்கள் தற்பெருமையாகக் கட்டிக் கூறியன என எழுதியவர்களும் பிற்பாடு. ஒரு சங்க மேனும் இருந்திருக்கவேண்டும் என ஒப்புக் கொண்டு உள்ளனர்.

3

## சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரை

சிலம்பு எட்டாம் வேனிற்காதை நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் என்று தொடங்கு கிறது. இதற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார், கடலுள் மூழ்கிய குமரிக் கண்டம் பற்றியும் சங்கங்கள் இருந்தமை பற்றியும் பல குறிப்புக்கள் தருகின்றார். அவை சில இறையனார் களவியல் உரையுடன் ஒத்தும் வேறுசில புதிதாகவும் காணப்படுகின்றன. அவற்றையும் முழுவதும் தெரிந்து கொள்வது நலமாகும்.

> நெடியோன் குன்றம் - வேங்கட மலை. தொடியோள் பெண்பாற் பெயராற் குமரி என்பதாயிற்று; ஆகவே தென்பாற்கண்ணதோர் ஆற்றிற்குப்பெயராம்.

ஆனால், நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்னாது பௌவமும் என்றது என்னை யெனின், முதலூழி இறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முது நாரையும் முதுகுருகும் களரியாவிரையு முள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாறபதிற்றியாண்டு இரீஇயினார் காய்சினவழுதி முதல் கடுங்கோன் . ஈறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள்

ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன்தொல்காப்பியம்புலப்படுத்து இரீஇயினான்.

அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவத வாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரை நாடும் ஏழ்குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத் தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும் காடும் நாடும் பரியும் தடநீர்க்குமரி வட பெருங்கோட்டின் காறும் கடல்கொண்டொழிதலால் குமரியாகிய பௌவம் என்றார் என்றுணர்க.

**இஃது என்னை பெறுமாறெனின் 'வடி வேலெறிந்த வான்பகை பொறாது, பஃறுளியாற்றுடன் பல்மலை யடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள' (11:18-20) என்பதனாலும், கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையானும், உரை யாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும், பிறவாற்றானும் பெறுதும்.**

மேலும் சிகண்டி என்பாரும் இதே கருத்தைக் கூறியுள்ளாரென்றும் வடதிசைக்கண் திரிபுடைமொழி பலவுளவாதலின் வேங்கட மலையை எல்லை கூறினா ரென்றும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார்.

இதன்படி கடல்கொண்டதனாலேயே தொல்காப் பியம் தோன்றியதாகக் கருதவேண்டியுளது. ஏனைய சங்கங்கள் பற்றிய குறிப்பில்லை. ஆயினும் கடல் கொண்ட தென்னாடு பற்றி விரிவாக உளது.

இவையும் முன்னைய வரலாற்றுண்மையைக் கேள்விப்பட்டு எழுதியவை போலவே தோற்றுகின்றன.

# 4

## புறநானூறும்

நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து.

தொல்காப்பியனார் தம் நூலை அரங்கேற்றினார் எனப் பனம்பாரனார் பாடுகின்றார்.

யார் இந்தப் பாண்டியன்?

நிலந் தரு என்றாலே, கடல் கோள்களால் இழந்த நிலப்பகுதிக்கு, ஈடாக, மக்களைக் குடியேற்ற, பக்கத்து நாடுகளின் நிலத்தைத் தந்தவன் எனலாம். வடிவேல் எறிந்த வான்பகை, கடல் சுவற வேல்விட்டவன், வடிம்பலம்ப நின்ற பாண்டியன் (கடல் தன் காலைக் கழுவுமாறு அதனை எதிர்த்து நின்றவன்) என்பன, அப்பாண்டியன் கடலுடன் போராடியதைக் குறிப்பன.

இந் நெடியோன் தொன்று தொட்டுப் புராணகாலம் வரை பலபடப் பாரட்டப்படுகிறான். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமை யார் பாடும்போது இம்மன்னனைக் குறிப்பிடுகின்றார்.

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே (புறம் : ௯)

**முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றான் என்ற வியப்பால், நெடியோன் என்றான் என்ப**

என்பது பழையவுரை.

**உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்**
**நிலந் தந்த பேருதவிப்**
**பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்! (61)**

அத்தகைய நெடியோனின் வழிவந்தவன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் என மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் பாடுகின்றார் (உம்பல் — வழித்தோன்றல்) மேலும் அவர்,

**பல்கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்**
**புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்**
**நிலந்தரு திருவின் நெடியோன் போல (760-764)**

சிறப்புற்று வாழ அம் மன்னனை வாழ்த்துகின்றார். சிலம்பிலும் நிலந்தரு திருவின் நெடியோன் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றான் (சிலம்பு 15, 22)

மாங்குடி மருதனார் பற்றிப் பாண்டியன் நெடுஞ் செழியன் குறிப்பிடுகிற பாடல் ஒன்றுளது.

**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவனாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைக என் நிலவரை (புறம். 72)**

இவ் வஞ்சினப் பாட்டு, மாங்குடி மருதனார் தலை வராகப் புலவர் அவையத்தே இருந்ததைக் குறிக்கிறது. காலத்தால் மிக முற்பட்ட நெடியோன் காலம் முதல், இந்நெடுஞ்செழியன் வரை அவையம் (சங்கம்) இருந்த மையும் அவற்றிற்குத் தலைவரும் பிறருமாகப் புலவர் பலர் திகழ்ந்தமையும் நன்கு கூறப்படுகின்றன.

மேலும் பாண்டியருக்கும் தமிழுக்கும் மிக நெருங்கிய உறவு இருந்தமை, தொன்றுதொட்டு நூற்றுக்கணக்கான இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை (சிறுபாண் 66-67)

தமிழ்கெழு கூடல்தண்கோல் வேந்தே (புறம் 58)

தமிழ் வையைத் தண்ணம் புனல் (பரி 6)

இங்ஙனம் வருவன பல பனம்பாரனார் பாயிர உண்மையை நிறுவுகின்றன.

# 5

# கலித்தொகை

பாலைக்கலி 34ஆம் பாடலில், தலைவன் திரும்பி வருவதாகச் சொன்ன இளவேனிற்காலம் வந்தும், அவன் வந்திலனே என வருந்தும் பகுதி, மூன்று தாழிசைகளில் இடம்பெறுகின்றது.

பிரியும்போது கண்ணீர்விட்டு, வழியனுப்பிய நம்மிடம் அவர் திரும்பிவருவதாக உறுதி கூறியது. வையை மணல் மேட்டில் பூத்துள்ள முல்லைப் பூக்களின், நறுந்தாதை வண்டுகள் உண்ணும் இவ் இளவேனிற் காலமல்லவா?

பிரியும்போது வெற்றியுடன் திரும்புக என வாழ்த்தி வணங்கி நாம் விடை கொடுத்தபோது அவர் திரும்புவதாக உறுதி கூறியது, வையை மணல் திட்டுகளில், காதலர்கள் இணை இணையாக காமன் விழாக் கொண்டாடும் இவ் இளவேனிற் பருவமல்லவா?

பிரியும்போது நாம் பலவாறு சிந்தித்து, வேறு வழியின்றி வழியனுப்பியபோது. அவர் கட்டாயம் திரும்பி வருவேன் என்றது உலகம் புகழும் இக்கூடல்மாநகரிலே புலவோர் நாவில் பிறக்கும் புதிய புதிய நூல் களைக் கேட்டு மக்கள் மகிழும் இவ் விளவேனிற் காலமல்லவா?

இவ்வாறு தலைவி வருந்த, அவனும் வர, இன்பமாக முடிவதைத் தோழி கூறுவதாக இக் கலிப்பாடல் உளது.

கூடல்மாநகர மக்கள், புதிய நூல்களைப் புலவர்கள் அரங்கேற்றக் கேட்டு மகிழும் காலம் இளவேனிற் பருவம் என்பது தெளிவுபடுகிறது.

அவ்வாறு கேட்டு மகிழ ஓர் 'அவையம்'
இருந்ததும் உய்த்துணரப்படுகிறது. அப்பாடல்கள் வருமாறு:

வண்ணவண் டிமிர்ந்தானா வையைவார் உயர்எக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ,
கண்ணிலா நீர்;மல்கக் கவவிநாம் விடுத்தக்கால்
ஒண்ணுதால் நமக்கவர் வருதுமென்றுரைத்ததை

மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ,
வலனாக வினைஎன்று வணங்கிநாம் விடுத்தக்கால்
ஒளியிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை

நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக்கூடலார்
புலனாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ,
பலநாடு நெஞ்சினோம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை (கலி 34)

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடிய இதனை, வலியுறுத்துமாறு, பிறிதொரு பாடலும் கலித் தொகையில் உளது.

பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்க்கு
மதி மொழி இடல்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறுவாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர! (கலி 68)

என்று பாண்டியன், மருதன் இளநாகனாரால் விளிக்கப் படுகின்றான். மதுரை புரிசை (மதில்) சூழ்ந்த நகரம். அங்கு பிறர்க்கும் பொதுவாக என்றில்லாமல், தமக்கே உரித்தாக ஆளும் வேந்தர்க்கு அறிவுரை கூறுமியல்பை

யுடைய, அமைச்சரைப்போல விளங்கிய புலவர்கள் இருந்தனர். அவர்கள் புலன் நாஉழவர்கள் - அறிவுடைய நாவாலே தம்முன்னோர்பாடிய மொழி களையே நீராகக்கொண்டு உழுதுண்ணும் (பாட்டுப் பாடி வாழும்) இயல்பினர். அங்கு பொல்லாத சொற்களைக் கேட்க விரும்பாது அவற்றை நீக்கிவிடும் இயல்புடைய மக்களின் செவிகளே வயல்களாக அப்புலவர்களின் புதிய புதிய நூல்களை, உடனிருந்து கூடிக்கேட்டு மகிழ்வர்.

இப்பாடலில் வரும் புதுமொழி கூட்டுண்ணுதல், புலன் நாவில் பிறந்தசொல், புரிசைசூழ் புனலூர் என்பன, முன் காட்டிய கடுங்கோ பாடற் கருத்துடன் ஒத்துப் போதல் கருதத்தக்கது.

இக் கலித்தொகைப் பாடல்கள், மதுரை மாநகரில் அவையம் (சங்கம்) இருந்ததையும் அங்கு ஆண்டு தோறும் இளவேனில் எனும் வசந்த காலத்தில், பாண்டிய மன்னர் முன், மக்கள் கூடிச் சுவைக்க நூல் களை அரங்கேற்றியமையையும் தெளிவுபடுத்துகின்றன.

# 6

## சிலம்பு: கயவாகுமன்னன்

கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து, விழா எடுத்து பாண்டியர், கொங்கிளங்கோசர், சோழன் பெருங்கிள்ளி யாவரும் வழிபட்டனர். அவர்களைப் போல இலங்கைக் கயவாகுவும் விழா எடுத்தமை, உரைபெறு கட்டுரையில் கூறப்படுகிறது *(உரை - புகழ்)*.

> அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு
> என்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக்
> கோட்டமுந்துறுத்தாங்கு. அரந்தை கெடுத்து
> வரந்தருமிவளென ஆடித் திங்கள் அகவையின்
> ஆங்கோர் பாடிவிழாக் கோள் பன்முறை எடுப்ப
> மழைவீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா
> விளையுள் நாடாயிற்று.

வரந்தருகாதையில், குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும் கடல்சூழ் இலங்கை கயவாகு வேந்தனும் தங்கள் நாட்டிற்கும் வந்து, வரந்தர வேண்டுமெனக் கேட்டதாக வருகிறது *(160)*. இலங்கையில் முதற்கய வாகு கி.பி.171 முதல் 193 வரை அரசாண்டதாக இலங்கை அரச வரலாறு, மகாவமிசம் கூறுகிறது. சிலப்பதிகார காலம் அது.

# 7

## பாரதப்போர்

முரஞ்சியூர் முடிநாகராயர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப் பாடும் பொழுது, பாரதப்போரில் இரண்டுபக்கப் படைக்கும் சேரன் பெருஞ்சோறு படைத்ததாகக் குறிப்பிடுகிறார்.

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத்தொழிய
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!

(புறம்:2)

செஞ்சிலுவைச் சங்கம் போலச் சேரன் விளங்கியதைச் சிலர் மனம் ஒப்புவதில்லை. இப்படி ஒரு நாடகம் நடந்த போது, சேரன் சோறளித்தானாம். வடமொழியில் நம்பவியலாச் செய்திகளை அடுக்கிக் கூறி, இவற்றை நம்பாவிட்டால் நரகம் போவீர் என்று கூறுகின்றனர். நாம் அவ்வாறு கூறுபவர்கள் அல்லர்.

சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில், ஊசல் வரியில் இச்செய்தி வருகிறது.

ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்!
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்

மூவேந்தரையும் புகழும்பொழுது சேரன் இவ்வாறு புகழப்படுகின்றான். பெருஞ்சோறு பயந்த திருந்து வேல் தடக்கை.... புகார் நகர் வேந்தன் (சிலம்பு. 23:55).

அகநானூற்றில், மாமூலனார், 'முதியர்ப் பேணிய உதயஞ் சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை (233) எனப்பாடுவதும் இவண் ஒப்பிடற்பாலது.

வடமொழியில் பாரத நூலிலும் வான்மீகியின் இராமாயணத்திலும் மூவேந்தர் குறிப்பும் வாணிகத் தொடர்பும் பற்றி இருப்பதை, பி.டி.சீனிவாச அய்யங் கார் குறித்துள்ளார். (History of Tamils).

# 8

## சிபிச்சக்கரவர்த்தி

### சோழர் முன்னோன்

சிபிச் சக்கரவர்த்தி புத்தமதம் சார்ந்து, ஒரு வேடனால் அம்பெய்யப் பெற்ற புறாவைக் காப்பாற்றத் தானே, துலாக்கோலில் ஏறி உயிர்தந்தான் என்பதொரு வரலாறு. இவ்வாறு சோழர் பற்றிய பல பாடல்களில் வருகிறது.

புறநானூற்றில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை மாறோகத்து நப்பசலையார் பாடிய 37—ஆம் பாடலில்,

> புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்
> சினங் கெழு தானைச் செம்பியன் மருக

என்று வருகிறது. இதன் அடிக்குறிப்பில், இச்செய்தி பரிமேலழகர் உரை வரை வருவதை மிக விரிவாக உ.வே.சா. எடுத்துக் காட்டியுள்ளார்.

அச்சோழ மன்னனை மீண்டுமொரு பாடலிலும் நப்பசலையார் இச்செய்தியைச் சுட்டி விளிக்கின்றார்.

> புறவின் அல்லல் சொல்லிய கறையடி
> யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
> கோன்நிறை துலாஅம் புக்கோன் மருக! (புறம்.39)

யானைத் தந்தத்தாற் செய்த துலாக்கோலில் ஏறியமை இதில் கூறப்படுகிறது.

சோழன் மாவளத்தானை, தாமப்பல் கண்ணனார் பாடியது:

அவிர்சடை முனிவரும் மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக! (புறம்.43)

இவ்வாறு புறவின் அல்லல் தீர்த்த இக்குறிப்பு புறம் 46, சிலப்பதிகாரம்: 20, 23,29 காதைகளிலும் பிற்கால நூல்களிலும் தொடர்ந்து கூறப்பட்டு வந்துள்ளது. சிபி —சோழ அரசின் வாரிசு என்பதை நிறுவ, மேலும் ஆராய்வது நல்லது.

9

# இராம கதை

சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடிய புறப் பாட்டில் இராமாயணக் குறிப்பு வருகிறது.

சோழன் மிகப்பல பொன் அணிகலன்களைத் தந்து விட்டானாம். அதைப் புலவரது சுற்றத்தார் முறைப்படி அணியாமல் மாற்றி மாற்றி அணிந்தது, நகைப்பை விளைவித்ததாம். அணிகலன்களைப் பார்த்தே அறியாத பாணர் கூட்டத்தின் செயலைப் புலவர் தம் கூற்றாகப் பதிவு செய்கின்றார்.

எமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந்தோனே!
அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித் தொடக்குநரும்
செவித் தொடர் மரபின விரற்செறிக்குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக்குநரும்
மிடற்றமை மரபின அரைக்குயாக்குநரும்
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு
அறாஅவருநகை இனிதுபெற்றிகுமே... (புறம்.378)

சீதையை இராவணன் தூக்கிச் சென்ற பொழுது, அவள் தன் நகைகளைக் களைந்து காட்டில் எறிந்தாளாம். அதைக் கண்ட காட்டுக் குரங்குகள், அவற்றை எடுத்து மாற்றி மாற்றிப் போட்டுப்பார்த்து, இடையறாத சிரிப்பை விளைவித்தனவாம். அதுபோன்று, இப்போது, வறுமைவாய்ப்பட்டவர்கள் அணிகலன்களைக் கண்ட தும் அடைந்த நிலை இது என்பது இதன்கருத்து.

தொல்லிலங்கை கட்டழித்த சேவகன என்று சிலம்பும் குரவை பாடும் (ஆய்ச்சியர் குரவை).

அகநானூற்றில் இராமகதை பற்றி, வேறு எங்கும் காணாத செய்தி வருகிறது. மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் நெய்தல் திணையில் பாடியது அப்பாடல்

தலைவன் பிரிவினால் ஊர் அலர் பெரிதாயிற்று. இப்போது அவன் வரைய (மணம் செய்ய) வருதலால், ஊரார் வாய் அடங்கிப்போனது. எவ்வாறு என்றால், இராமன் இலங்கைமேல் படையெடுத்துப் போகுமுன், தென்கடற்கோடியில் ஒரு கரையோரமாக, ஆலமர நிழலில், தன் தோழருடன் அரிய மறைபொருளான செய்திகளைப் பற்றிக் கலந்துரையாடிக் கொண்டிருந் தான். அப்போது பறவைகள் செய்த ஒலி, இடையூறாக இருந்ததால், அதனைத் தன் ஆணையால் அடக்கியது போல, ஊரலரும் அடங்கிற்று என்பதாம்.

> வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
> முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்துறை
> வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
> பல்வீழ் ஆலம் போல
> ஒலியவிந் தன்றிவ் அழுங்கல் ஊரே (அகம்.70)

மதுரையார் இச்செய்தியை எங்கிருந்து பெற்றார் எனத் தெரியவில்லை.

வடமொழியாளர் மூன்று நிலைகளிற் செயற்பட்டனர். (1) எதனையும் இறைவன் அருளியது; இதில் எதிர்க்கேள்விக்கு இடமில்லை என்பர். (2) எதனையும் மறைப்பதையே மூலதனமாகக் கொண்டு யாருக்கும் எதுவும் தெரியாதபடி செய்து விடுவர். (3) எல்லாமே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வந்தவை என்பர். இடைச்செருகல், ஒன்றைமாற்றித் திரித்தல் எல்லாவற்றுக்கும் இந்த 'மறைக்கும்' முயற்சி துணை செய்தது. அதை நம்புவோர் தமிழில் சான்றுடன் கூடியதையும் மறுப்பர். இதுவே நடைமுறை.

# 10

## காப்புணர்ச்சி

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கும் பொழுது, சில உண்மைகள் புலனாகின்றன. மிகப் பழங்காலத்தே ஏற்பட்டே கடல்கோள்களால் பாண்டியநாடு பெரிதும் பாதிக்கப்பட்டது; சேரநாடும் பாதிக்கப்பட்டது.

அதனால் கடல்கோள்கள், காலப்பழைமை, ஏடு களாதலின் கறையானரித்தல், மக்களின் அறியாமை— இவற்றால் தமிழ் இலக்கியச் செல்வத்தில், பத்தில் ஒன்பது பகுதியை நாம் இழந்துவிட்டோம். கடல் கோள்களால் போனவையே மிகுதி. போனவை போக இருந்தவற்றைக் காக்கும் எண்ணம், நினைவிலுள்ள தைப் பேணி எழுதி ஆவணப் படுத்துதல் என்பன காணப்படுகின்றன.

அடுத்துத் திட்டமிடல் தெரிகிறது. 4 அடி முதல் 8 அடி வரையுள்ள நானூறு பாடல்களைக் குறுந் தொகை நானூறு எனவும், 9—12 அடிக்குட் பட்டனவற்றை நற்றிணை நானூறு எனவும் 13—31 அடிக்குட்பட்டவற்றை நெடுந்தொகை நானூறு எனவும் தொகுத்தது ஒரு திட்டமிட்ட முயற்சியே. அகநானூற்றில் ஒற்றைப்பட வருவன எல்லாம் பாலை; 8,8—குறிஞ்சி; 4 எல்லாம் முல்லை; 6 எல்லாம் மருதம் 10 என் வருவன எல்லாம் நெய்தல்

பலவிதமான மலர்களைத் தொகுத்தது போன்ற இதில், ஒரு திட்டமிட்டமை புலனாகின்றது; பதிற்றுப் பத்து பத்துப்பத்தாகப் பாடப்பட்டிருப்பதிலும், ஐங் குறுநூறு ஐவர் கூடி ஐந்திணைக்கும் நூறுநூறு, ஒவ் வொரு நூறுக்கும் பத்துப்பத்து எனப் பேசிவைத்துக் கொண்டு பாடியது போலப் பாடப்பட்டிருப்பதிலும் ஒரு திட்டமிடல் தென்படுகிறது.

கூட்டுமுயற்சி என்பதிலும் ஐயமில்லை. பலரும் கூடி அல்லது திட்டமிடலோ, தேர்ந்தெடுத்தலோ இய லாது. பல ஏடுகள் கிடைத்தும். பாடியவர் பெயர் தெரி யாததால், பாடலில் வரும் உவமை, அடைமொழி, ஒரு சொல் போன்றவற்றால், அப் புலவருக்குப் பெயர் சூட்டியுள்ளனர். கயமனார், அணிலாடு முன்றிலார், கல்பொருசிறு நுரையார் எனக் காணலாம். செவ்வரக் கினை ஊட்டியது போன்றது எனப் பாடியவர்க்கு 'ஊட்டியார்' என்றே பெயரிட்டுவிட்டனர். தேர்ந்தெடுத் தவையாதலால், தள்ளப்பட்டவை எத்தகையனவோ என்ற ஐயம் ஏற்படுகின்றது.

இதற்கு அவர்கள் பின்பற்றிய 'தொகுப்புக்கலை' நுட்பங்களை ஆராய்ந்தறிய வேண்டும். இவற்றுடன் மீட்டுருவாக்க முயற்சியும் நடந்துளது. கலியும் பரி பாடலும் மிகுதியாக இருந்து மறைந்தன போலும். தொல்காப்பியர் அகம் பாடுதற்குக் கலியும் பரி பாட லுமே உரியன என்றார். ஆனால் ஆசிரியப்பாவால் ஆனவையே நமக்குக் கிடைத்துள்ளன. அதனால் இப் போதுள்ள கலித்தொகையும், பரிபாடலும் முன்னை யவற்றுக்கு ஈடாகப் புதிதாகப் பாடப்பட்டனவோ என்ற ஐயம் எழுகின்றது.

ஐங்குறு நூற்றை ஐந்து புலவர் பாடியது போல, கலித் தொகையையும் ஐவர் பாடி இருப்பதால் ஐயம்

எழுகின்றது. இதனை நாம் மீட்டுருவாக்க முயற்சி எனலாம்.

எங்ஙனம் நோக்கினும் ஒரு பேழையில் வைத்துக் காக்குமளவு நம் செவ்வியல் நூல்களின் தொகுப்பு முறை, அமைப்பு, பாடல்களிடையே காணும் இயற்கைத் தன்மை, சிலபோது இலக்கணத்தை வைத்துக்கொண்டு அதற்கேற்பப் படைக்கப்பட்டன வோ என எண்ண வைக்கும் நுண்ணிய வேறுபாடு என்பன விளங்குகின்றன.

தொல்காப்பியத்தையே ஒரு தொகுப்பு முயற்சி எனலாம். முன்னைய செந்தமிழியற்கை சிவணிய நிலத்தின்கண் விளங்கிய, முந்து நூல்களைக் கண்டு, அவற்றை முறைப்படி எண்ணினார் என்பதாலும் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை விளங்கிய தமிழ்பேசும் நாட்டின்கண் வழங்கிய வழக்கும் செய்யுளும் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டார் என்பதாலும் இவை அனைத்தையும் 'தரவுகளாகத்' தொகுத்தமை தெற்றெனப் புலப்படும். 'போக்கறு (குற்றமற்ற) பனுவலாகப் புலந்தொகுத் தோனே' என்பதால் இது உறுதிப்படுகின்றது. அதற்கேற்பத் தொல்காப்பியரும் என்ப, என்மனார் புலவர் என்றாற்போல, *235* இடங்களுக்குமேல் குறிப்பிடுகின்றார். நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே, யாப்பென மொழிப யாப்பறி புலவர், நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே என்றாற் போல்வன வெறும் சொல்நடை அல்ல.

இதற்காகத் தொல்காப்பியர் தாமாக எழுதவில்லை, பலரிடம் கடன் வாங்கியே எழுதினார் என்ற நிலைக்குப் போய்விடக் கூடாது. இலக்கணமோ,

ஆய்வுகளோ 'தரவுகளைத்' தொகுத்தே எழுத வேண்டியவை. தொல்காப்பியம் முழுவதும் அவரது நுண்மாண் நுழைபுலம், எழுதும் முறை, தமிழ்மொழி, இலக்கியப் புலமையாவும் ஒவ்வொரு நூற்பாவிலும் இயலிலும் வெளிப்படுகின்றன. இன்றைய ஆராய்ச்சி நெறிமுறைப்படி (Research methodology) அன்றே அவர் எழுதயுள்ளமை வியப்பளிக்கும் செய்தி ஆகும்.

ஸ்காண்டிநேவியா மலை முகடுகளில் விளங்கிய நீண்ட நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந்த ஒருவர் ஹோமரின் காப்பியங்கள் அவற்றின் தொகுப்பே என்றார். சி.எம்.பௌரா, அந் நாடோடிப் பாடல்களின் தாக்கம் உளதெனினும் அக் காப்பியங்களில் தனிஒரு மனிதரின் மூளை இயங்குகின்றது என நிறுவினார். தமிழிலுள்ள சிலப்பதிகாரமும் இளங்கோவின் காலத்தில் கண்ணகி பற்றி மக்களிடையே பரவலாக வழங்கிய நாட்டுப்புறப் பாடல்களின் வழி, பிறந்ததேயாகும். அவரே காடுகாண் காதையில் காணப்படும் பலவகை நாடோடிப் பாடற்பெயர்களைக் குறிப்பிடுகிறார். அவற்றைக் கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் மூவரும் கேட்டுக் கொண்டே, வழிநடை வருத்தம் தெரியாதபடி வயல் வரப்புகளின் மேல் நடந்து சென்றதாகப் பதிவு செய்கின்றார். பலவகைவரிப் பாடல்களும், குரவை, வள்ளைப் பாடல்களும் இடம் பெற்றமையும் இதைக் காட்டும். ஆயினும் அது தொகுப்புக் காப்பியமன்று; இளங்கோவடிகளின் இலக்கிய வடிவமாக்கிய தனித் திறனால், அது 'நெஞ்சை அள்ளும் காப்பியமாக' என் றென்றும் நிலைத்துவிட்டது.

திருக்குறளையும் இவ்வாறான ஒரு தொகுப்பு நூலென்றால் வியப்படையாதீர்கள். முற்றி முதிர்ந்த, செறிந்த, நிலையான, மானுட விழுமியங்கள் பற்றிய

தமிழரின் ஒட்டுமொத்தமான சிந்தனை வளங்களை யெல்லாம் கேட்டு. உணர்ந்து, பழகி, அனுபவித்து தம் நுண்மாண் நுழைபுலத்தால் தொகை வகைப்படுத்திய தாலேயே அந்நூல் தொட்டஇடமெல்லாம் மாணிக்க ஒளி வீசுகின்றது. அனைத்தும் நூறுமுறை சிந்தித்துத் தேர்ந்தெடுத்தவை.

பத்துப்பாட்டும் நெடிய பாடல்களையும் பாடிக் காட்ட நினைத்த, குறும்பாடற்பாவலர்களின் முயற்சி யேயாகும். ஏனைய எட்டுத்தொகை நூல்களின் தொகுப்பு முயற்சியும் யாவரும் அறிந்ததே.

இதனால் பிற்காலத்தும் பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுத்தனர். (கணக்கு—நூல்கள்; கணக்காயர் —ஆசிரியர்) முன்னைய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முற்பட்டனவாதலின், அவற்றைப் பதினெண் மேற் கணக்கு என எண்ணிக்கொண்டு, அவற்றுக் கீடாகப் பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுத்துள்ளனர். பதினெண் மேற்கணக்கில் 'திருக்குறள்' அடங்கா ததால், அதை இங்கே கொண்டுவந்து சேர்த்துள்ளனர். பின்னரும் இரட்டைக் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம், ஐம்பெரும் காப்பியம், தொண்ணூற்று ஆறு சிற்றிலக் கியவகை, பதினெண் சித்தர்கள், பன்னிரு திருமுறை, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பதினான்கு சிவநெறிச் சாத்திரங்கள், வள்ளற் பெருமானின் ஆறுதிருமுறைகள் என்று எண்ணிப் பார்த்தால் முதலில் எழுந்த காப்புணர்ச்சி, தொகுப்புத்திறன், திட்டமிடல், கூட்டு முயற்சி போல்வன தொடர்ந் ததை அறியலாம். இவை சில வரையறைக்குள் அடங்குவன அல்லவெனினும் இவ்வாறு செய்து விட்டால், கூடுதல் குறைவுகளையும் எண்ணிப் பார்த்து, இவை நிலைக்க இம் முயற்சிகள் முன்னோ டியாக அமையும் என நம்பியுள்ளனர்.

11

# இந்திய ஒருமைப் பார்வை

ஒரு காலத்தில் பாரத நாடு முழுவதும் தமிழே வழங்கியது என, வடமொழி நூல்கள் அனைத்தையும் பழுதற முழுமையாகக் கற்றுவிட்டு எழுதுகின்றேன் என்ற முன்னுரையுடன் பி.டி.சீனிவாச அய்யங்கார் கூறுகின்றார். வடமொழியிலும் அதன் கிளைமொழி களிலும் தமிழின் தாக்கமிருப்பதை விவரித்துவிட்டு, கீழ்வருமாறு எழுதுகின்றார். 'இச் சான்றுகளின் வழி அறியும் போது, முன்பொரு காலத்தில் தமிழையும் அதன் கிளைமொழிகளையும் பேசிய மக்களே இந்தியா முழுவதும் பரவி இருந்தனர் என்று அது மெய்ப்பிக்கின்றது' (These facts can only prove that people speaking dialect allied to tamil once inhabited the whole of India and not that these people must have necessarily have come into India from outside the country (Histroy of the Tamil, p.2) ) எமனோ, பரோ எனும் சமஸ்கிருதப் பேராசிரியர்கள் தொகுத்த திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதியில், இந்திய நாடு முழுவதும் 20 திராவிட மொழிகள் வழங்கியதை, நிறுவியுள்ளனர். இங்கு நாம் அகச்சான்றுகளையே தொகுப்பதால், அவை பற்றித் தனிநூலில் தொகுக்க வேண்டும்.

ஆரியர்களின் வருகைக்குப்பின் தமிழர்கள் தென் னாட்டளவில் வாழ்ந்தாலும் வடதிசை மன்னர்

களுடன் போரிடுவதையும், இந்தியா முழுவதையும் தம் ஆட்சியின்கீழ் கொண்டு வருவதையுமே வழக்க மாகக் கொண்டனர். இமயவரம்பன் நெடுஞ்சேர லாதன், சேரன் செங்குட்டுவன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கரிகாற் பெருவளத்தான் எனக் குறிக்கத் தக்க மூவேந்தர் பலரும் வடஇமயம் வரை படையெடுத்து, வென்று திரும்பியுள்ளனர்.

தொல்காப்பியத்தை அரங்கேற்றிய நிலந்தரு திருவிற் பாண்டியனைக் குறிப்பிடும் பொழுதே,

**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி**

என்று சிலம்பில் கூறப்படுகிறது *(11)*, கடல்கோளுக்குத் தப்பிய பல ஆயிரம் மக்களை இமயம்வரை குடி யேற்றிக் காத்தனனாம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய, பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தில்,

**கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி**
**பரந்திலங்கு அருவியொடு நரந்தம்கனவும்**
**ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்**
**தென்னங் குமரி யொடு ஆயிடை**
**மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே (11)**

நரந்தம்புல்லும் கவரிமானும்உள்ள இமயம் என்ற குறிப்பு முக்கியமானது. 'நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி' என்று புறநானூற்றில் வருவதும் காண்க *(132)*.

சிலப்பதிகாரத்தில் கரிகாற் பெருவளத்தானைப் பற்றி வரும் வரலாற்றுக் குறிப்பு இது:

**இமையவர் உறையும் இமையப் பிடர்த்தலைக்**
**கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோர்க்கு**
**மாநீர்; வேலி வச்சிர நன்னாட்டுக்**

கோன்இறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகை புறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரணவாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின (97-106)

இம் மன்னர்களைப் பற்றிய வடநாட்டு வரலாற்றுச் சான்றுகளை நாம் தேடவேண்டும்.

கயல் எழுதிய இமய நெற்றியில்
அயல் எழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பாரரசாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலில்
(ஆய்ச்சியர் குரவை 5)

குமரியொடு வடஇமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழ்ஒளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன் என்று சேரன் செங்குட்டுவன் குறிக்கப்படுகின்றான். (வாழ்த்துக் காதை)

இங்ஙனம் சிலம்பிலும் பிற நூல்களிலும் நூற்றுக் கணக்கில் வரும் குறிப்புக்களை ஒருவழித் தொகுத்து ஆராய வேண்டும்.

இதனால் பாரத நாட்டை ஒரே நாடாகப் பார்க்கும் பார்வை, ஆங்கிலேயர் வருவதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழிலக்கியங்களிற் காணப் படுகிறது.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பெளவத்தின் குடக்கும் (புறம் 6)

நெட்டிமையார் எனும் புலவர், பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதியைப் பாடியது இது.

குறுங்கோழியூர் கிழார், சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பாடிய புறப்பாடலிலும் இதுபோற் காண்கிறோம்.

**தென்குமரி வடபெருங்கல்**
**குணகுட கடலாஎல்லை**
**குன்றுமலை காடுநாடு**
**ஒன்றுபட்டு வழிமொழிய** (புறம் 17)

ஹிமம் — பனி, பாரதியார் 'வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்' என்றாரல்லவா?

**அடுக்கத்துச்**
**சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை**
**அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்**
**முத்தீ விளக்கில் துஞ்சும்**
**பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே** (புறம் 2)

முரஞ்சியூர் முடிநாகராயர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப் பாடியது இது.

அந்தணர்கள் 'சந்தியா வந்தனம்' செய்தல், அவர்கள் முத்தீவளர்த்தல், நவ்வி மான், பொன்னிறக் கைலாயம் யாவும் கற்பனையாக இருக்க வழியில்லை. கண்ணாற் கண்டவை இவை.

கிள்ளி வளவனைப் பாடும் நப்பசலையார்,

**ஓங்கிய வரையளந்து அறியாப் பொன்படு**
**நெடுங்கோட்டு இமயம்** (புறம் 39)

என இதனையே விரிவாகப் பாடுவதோடு 'இமயம்' எனப் பெயரையும் சுட்டுகின்றார். பரணர் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனை, வடதிசை எல்லை இமய மாகத் தென்னங்குமரியொடு ஆயிடை ஆண்டதாகக்

குறிப்பிடுகிறார். அதில் கடவுள் நிலைஇய கல் ஓங்கு நெடுவரை எனக் கயிலாயத்தில், சிவன் இருப்பதையும் குறிக்கின்றார் (பதிற்று. 43).

நவ்வி, கவரிமான்கள் இமய மலையிற் காணப் படுவன. குளிர் மிகுதியாதலால் கவரிமான் உடல் முழு வதும் மயிர் செறிந்திருக்கும். கம்பளி நெய்ய மனிதன் அதைக் கத்தரித்தால், மான் இறந்துவிடும். இதையே திருவள்ளுவர் மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் (969) என்றார்.

இவை அனைத்தையும் பொய், கற்பனை என்பாரும் இருந்தனர். இன்று ஆய்வு தெளிவடைந்து வருகிறது.

தமிழர்கள் பாரத நாட்டை ஒரே நாடாகப் பார்த்தமை, அவர்கள் அதற்கு முன் பாரதநாடு முழு வதும் பரவி இருந்ததன் எதிரொலியே எனில் மிகை யாகாது. தமிழர்கள் இன்னமும் அமைதி காக்காமல், இமயம் வரை சென்று, கள ஆய்வுகள் செய்து, உண் மைகளைக் கண்டறிய வேண்டும். இங்கு சுருக்கமாகச் சில இடங்களே காட்டப்பட்டன. முழுவதும் தொகுத் துப் பார்க்க இதை ஒரு முன்னோடியாகக் கொள்க.

12

# சிலம்பு: நூற்றுவர் கன்னர்

சேரன் செங்குட்டுவன் வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்றபொழுது,

சீற்றங் கொண்டிச் சேனை செல்வது
நூறறுவர் கன்னர்க்குச் சாற்றியாங்குக்
கங்கைப் பேரியாறு கடத்தற்காவன
வங்கப் பெருநிரை செய்கதாமெனச்
சஞ்சயன் போனபின்.... (கால்கோட் காதை 162-166)

After the death of Asoka, the Dakhan became independent under the Andhra kings, who belonged to the satavahana family, and generally added the title satakarni to their names. They ruled for nearly four centuries and a half, i.e., from 230 B.C. to A.D. 266. Their original home lay between the mouths of the Godavari and the Krishna and their early capital was Dhanyakataka on the lower course of the river Krishna ( K.V.Rangaswami Aiyangar, *A History of India,* Part I, Orient Longmans Ltd, Madras, 1948, pp. 143-144. )

சதகர்னீஸ் என்பதை நூற்றுவர் கன்னர் என மொழியாக்கம் செய்த இளங்கோ, அன்றைய நிலையில் வடதிசையில் கங்கைப் பேரியாறு வரை ஆண்ட மன்னர்களாதலின, அதனைச் சுட்டியுள்ளார்.

தினமலர் ஆர். கிருஷ்ணமூர்த்தி இச் சாதவாகன — சதகர்னீசிகளின் காசு ஒன்றைக் கண்டு, அதில் சேரர் சின்னம் 'வில்' குறிக்கப் பெற்றிருப்பதையும்

காட்டி, இச் செய்தியை நிறுவும் வகையில், மதுரையில் நடந்த 'நாணயவியல்' கருத்தரங்கொன்றில் விளக்கினார்.

# 13

## நந்தர்கள்

தொன்மை மிக்க காலத்தில் தென்னாட்டைப் போலவே வடநாட்டிலும் சிற்றரசுகள் பல இருந்தன. இந்யா துண்டு துணுக்குகளாக ஆளப்பட்டது. மகதப் பேரரசை நிறுவிய பிம்பிசாரன் அவன் மகன் அஜாத சத்துரு இருவருமே முதல் பேரரசாக, வடநாட்டில் பெரும்பகுதியை, வடமேற்கிலும் நடுநாட்டிலும் கொண்டுவந்தனர். பிம்பிசாரன் இராஜகிரிகம் எனும் தலைநகரைக் கொண்டு ஆண்டான். அவன் மகன் அஜாத சத்துரு, தலைநகரை மாற்றினால் மட்டுமே, எதிரிகளை ஒரு குடைக்கீழ்க் கொண்டு வர முடீயும் என எண்ணினான். அதனால் கங்கைக் கரையில், ஓரளவு நடுவண் இந்தியப் பகுதியில், பாடலிபுத்திரம் என்ற நகரை உருவாக்கினான். உலகிலேயே சிறந்த நகரமாகத் திட்டமிட்டுச் சிற்பக் களஞ்சியமாக உலகம் வியப்புடன் பார்க்குமளவு சிறப்பாக அமைத்தான். 150 ஆண்டுகள் மகரப் பேரரசு சிறந்து விளங்கியது. அதன் பிறகு நந்தர்கள் என்ற சிற்றரசர்கள், மேலோங்கி மகத நாட்டை அப்பாடலிபுத்திர நகரத்தையே தலைநகராகக் கொண்டு ஆளத் தொடங்கினர். எறத்தாழ் 250 ஆண்டுகள் நந்தர்கள் ஆட்சி, வடநாடு முழுவதும் சிறந்தோங்கியது. சூத்திர அரசர்கள் எனப்படும் அவர்கள் செல்வ வளத்தில் மிகச் சிறந்து விளங்கிய தால் அவர்கள் புகழ் இந்திய நாடு முழுவதும் பரந்து

விளங்கியது. தமிழகத்திலும் நந்தர்கள் புகழ் பரவியது. சங்கச் செவ்வியலில் மூன்று இடங்களில் நந்தர்கள் குறிக்கப்படுகின்றனர். கி.மு.550 முதல் கி.மு.322 வரை சிறப்புற்றிருந்த நந்தர்களைக் குறிக்கும் தமிழ்ச் செவ் வியல் இலக்கியம் அக்காலத்தது; அன்றே வளமும் செறிவும் இனிமையும் முதிர்ச்சியும் அமைந்ததாக அது திகழ்ந்தது. நந்தர்களின் இறுதி அரசனாக மகாபதும நந்தன் குறிக்கப்படுகின்றான். பதுமநிதி, அளவிறந்த செல்வத்தைக் குறிப்பது. 'சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தந்து, தரணியொடு வானாளத் தருவரேனும்' என்பது அப்பர் வாக்கு, அத்தகைய மகா பதும நந்தனுடைய பெருஞ் செல்வம் பற்றிய குறிப்பு சங்கப் பாடல்களில் வருகிறது.

இப்பேரரசன் காலத்தில்தான் அலெக்சாண்டரின் (கி.மு.330) படையெடுபபு நேர்ந்தது. அதன் பிறகு 'மௌரியப்' பேரரசு தலைமை கொள்கிறது. மகாபதும நந்தனை வென்றவன், சந்திரகுப்த மௌரியன் ஆவான் (கி.மு.321) நந்தர்களை வெல்லவும், வட இந்தியா முழுவதும் பேரரசை நிறுவவும் வழிகாட்டியவர் கௌடலீயர் எனப்படும் சாணக்கியர் ஆவார். 'அர்த்த சாத்திரம்' எழுதிய இவர், அரசியல் நுணுக்கம் அனைத் தும் அறிந்தவர். அவரது வழிகாட்டுதலில், மிகப்பெரிய பேரரசனாக, கிட்டத்தட்ட கால்நூற்றாண்டளவு இவன் சிறப்புற ஆட்சி செய்தான்.

பிறகு இவன் மகன் பிந்துசாரனும் அவன் மகன் அசோகனும் ஆண்டனர். அசோகன் கி.பி.268இல் ஆட்சிக்கு வந்தான். கி.மு.256இல் கலிங்கத்துடன் போரிட்டு அதில் போரினால் விளையும் கடும் அவலங் களை உணர்ந்தான். பிறகு போரை நிறுத்தி விட்டு, அமைதி வழியில் புத்தசமயத்தைப் பரப்பும் முயற்சி களில் ஈடுபட்டான்.

அசோகன் தந்தை காலத்தில் தெற்கு நோக்கிப் படையெடுத்தனர். தமிழ்நாட்டின் வடக்கெல்லை யிலிருந்த சிற்றரசர்களில் மோகூர் மன்னனுக்கும் ஒன்றுமொழிக்கோசர் என்பார்க்கும் பகைமை இருந்ததால், அக்கோசர் துணையுடன், மோரியர் மோகூர் மன்னனுடன் போரிட்டனர். இவ்வாறு தெற்கே படைகளுடன் வந்தபோது, விந்திய மலையிடையே குன்றுகள் தடையாக இருந்ததால், அவற்றை அறுத்து, வழியுண்டாக்கிக் கொண்டு வந்த செய்தி, தமிழ்ப் பாடல்களில் காணப்படுகிறது. தமிழக எல்லைக்கு இப் பால் அவர்கள் வந்திலர். அசோகன் மட்டுமே புத்த சமயச் சான்றோர்களை இலங்கை வரை அனுப்பினான். அவன் நிறுவிய கல்தூண்கள் அன்றைய எருமை நாட் டின் (மைசூர்) சித்தபுரி, எற்றகுடி எனும் ஊர்களில் உள்ளன. அவற்றில் சேர, சோழ, பாண்டிய, சத்தியபுத் திரர்களைத் தன் நட்பு நாட்டினராகக் குறித்துள்ளான். மோரியர்க்கு உதவிய 'ஒன்றுமொழிக் கோசரையே' அவன் சத்தியபுத்திரர் என்று குறித்தானாதல் வேண்டும்.

மேலே கூறிய அனைத்துச் செய்திகளின் சாரமும், இந்திய வரலாற்றாசிரியர்களால் எழுதப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புக்களுடன்பெரிதும் ஒத்து வருகின்றன. அவற்றில் இன்றியமையாப் பகுதிகளை இங்கு காண் போம். இன்றேல் நம்மவர்களுக்கு அத்துணை நம்பிக் கை பிறவாது.

> Ajatasatru who was a disciple of Buddha was also the founder of Pataliputra, which was to remain the chief city of India for a thousand years.
>
> Rajagriha was the old capital of Magadha under Bimbisara, but Ajatasatru, anxious to reduce the power of the lichchavis, decided to erect a fort on the Ganges from which he could contrl these turbulent people.

The city so founded was built according to a plan and was the wonder of its age. Magadha power continued for another 150 years under the same dynasty, which was replaced by the famous family of Nandas. From the Hathigumpa inscription of Kharavela, we know that the Nandas exercised power over kalinga also. The last of the Nandas, Mahapadma, was undoubtedly a powerful ruler who exercised sway over the whole of north India. The Nanda Kings were so prosperous that the tradition penetreted even to south India and is alluded to in a Tamil Poem. In fact, the Nandas seem to have developed a taste for luxury and glory which added to the primacy of the Magadhan Kingdom. It was in the time of Mahapadma Nanda that Alexander invaded the Punjab. (K.M.Panikkar, *A Survey of Indian History*, Bombay, 1947, pp.30- 31 ).

தோழி, பிரிவில் வருந்திய தலைவியிடம், தலைவன் நந்தர்களின் செல்வமே கிடைக்குமாயினும் நீண்ட பாலைநிலம் கடந்து, வடநாடு சென்றவன், நாம் படும் துன்பத்தைக் கேட்டால், அங்கே தங்கமாட்டான் என்று கூறுகின்றாள்.

**நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்**
**நந்தன் வெறுக்கை எய்தினும் மற்றுஅவண்**
**தங்கலர் வாழி தோழி!** (மாமூலனார், அகம்.25)

நந்தனது செல்வச் செழிப்புப் பற்றி, தென்னாடு வரை பரவி இருக்காவிட்டால், இது அக்காலமே இல்லையெனில், இவ்வாறு கூறியிருக்க இயலாது. கி.மு. நானூறை ஒட்டிய காலப்பகுதியில்தான், இவ்வாறு கூற வாய்ப்புண்டு. அல்லாமல் நெடு நாட்களுக்கு முன் நடந்ததைக் கூறினாள் எனல் எவ்வகையிலும் ஒவ்வாது.

# 14

## பாடலிபுத்திர நகரம்

பட்டினப்பாலையில், முட்டாச்சிறப்பிற் பட்டினம் பெறினும், வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய வாரேன். வாழிய நெஞ்சே *(218—220)* என வருவதை இங்கு ஒப்புநோக்குக. திருமாவளவன் காலத்தில் வாழ்ந்த கடியலூர் உருத்திரங்கண்ணனார், அம் மன்னனின் காலத்தவரல்லவா? இல்லாத ஒன்றைப் 'பெறினும்' என்று எவ்வாறு கூறமுடியும்?

மாமூலனார் பிறிதொரு அகப்பாடலிலும் அவரது இமயமலை பற்றிய நேரிடையனுபவம் பற்றியும், நந்தரது பெருஞ்செல்வம், கங்கைக் கரையிலுள்ள பாடலிபுத்திரத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்து, அக் கங்கையிலேற்பட்ட திடீர்வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

புகையிற் பொங்கி வியல்விசும்பு உகந்து
பனிஊர் அழற்கொடி பொற்பத் தோன்றும்
இமயச் செவ்வரை மானும் கொல்லோ?
பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ?
......
(தலைவர்) வேங்கடத்துக்கு அப்பால் சென்று
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே?

மாமூலனார் (அகம் 265)

தலைவர் நம்மைவிடப் பெரிதாக எண்ணிப்பிரிந்து சென்றதற்கு, அவர் தேட விரும்பிய பொருட்செல்வம் என்ன, இமயமலையைப் போன்ற அவ்வளவினதா? அல்லது நந்தர்கள் கங்கைக் கரையிலிருந்த தமது தலைநகராகிய பாடலிபுத்திரத்தில், பகைவர் கவராத படி, அதன் கரையோரத்தே புதைத்து வைத்திருக்க, அது ஒருமுறை ஏற்பட்ட பெருவெள்ளத்தால் அடித்துச் செல்லபட்டு விட்டதே, அந்தச் செல்வமா? ஏனோ அவர் நம்மைப் பிரிந்து சென்றுள்ளார்? — இவ்வாறு தலைவி வருந்துவதாக மாமூலனார் பாடுகிறார்.

பனி புகைபோலப் பொங்கி வானுற ஓங்கிக் காட்சிதரலால், இமயமலை பொன்னிற ஒளிச் சுடராய்க் காட்சிதருகிறது. குளிரிலும் பொன்னிற ஒளிக் கீற்றாகக் காட்சிதருகிற முரண் சுவை, நேரில் பார்த்ததை எடுத்தியம்புகின்றது.

கங்கையாற்றருகே பாடலிபுத்திர நகரம் இருந்தது, வரலாற்றில் அறியப்படுகிறது. அங்கு 'வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிதியம்' — தமிழ்ப் பாடல் தரும் புதிய செய்தி. இத்தகைய பாடல்களை உண்மையல்ல என மறுப்பது, இமயமலையையே சோற்றில் மறைப்பதற்கு ஒப்பாகும்.

குறுந்தொகையில் படுமரத்து மோசிகீரனார் பாடியுள்ள, பிறிதொரு செய்தியும் குறிப்பிடத் தக்க வரலாற்றுச் சான்றாகும்.

**வெண்கோட்டு யானை சோனை படியும்**
**பொன்மலி பாடலி** **(குறு.75)**

என்பது அது கங்கையின் கிளையாறாகிய சோனை யாறு அப்பெரு நதியிற் கலக்கு மிடத்தில், பாடலி புத்திரம் இருந்ததென்பதே இது தரும் செய்தி.

(சோணை, சோனை என இரண்டு பாடம் உள. சோனை என்பதே சரியானது).

காவிரி கடலிற் கலக்குமிடத்தருகே காவிரிப்பூம் பட்டினம் இருந்தது போன்றதிது.

கரிகாலன் வடநாட்டை வென்று திரும்பும் பொழுது மூன்று நாட்டவர் திறை கொடுத்தனர் என்று சிலம்பில் வருகிறது. வச்சிர நாடு, மகதநாடு, அவந்தி நாடு என்பன அவை. அவற்றில் வச்சிரநாடு சோனைக் கரை என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இந்நாடுகள் அடுத்தடுத்து இருந்தன. (இங்கு சோனை என்ற பாடமுண்மையை அறிக) 'சோனை ஒருநதி. இதன் வடகரையிலுள்ளது பாடலி புத்திரமென்னும் நகரம். பழைய காலத்தில் மகத நாட்டின் தலை நகரமாக இருந்தது — என்பது உ.வே.சா.தரும் குறிப்பு.

சோனையாற்றங்கரையில் பாடலிபுத்திர நகரம் இருந்ததை, பிறிதொரு அகழ்வாராய்ச்சி மூலமும் அறிகின்றோம்.

தளபதி வாடல் (Lt. Col. Waddell) என்பார் தம் அகழ் வாராய்ச்சியில், இந் நகரைத் தோண்டிப் பார்த்து ஆராய்ந்தார். 1892இல் தம் ஆய்வு முடிவை வெளியிட்டார். அவர் கருத்துப்படி, இன்று 'பாட்னா' என்று அழைக்குமிடத்திலேதான் அந் நகரம் இருந்தது. இதனை மனங்கொண்ட, இந்திய வரலாற்று அறிஞர் வி.ஏ.ஸ்மித் கீழ்வருமாறு எழுதியுள்ளார். பேரரசின் தலைநகராகிய பாடலிபுத்திரம் கி.மு.5ஆம் நூற் றாண்டில் உருவாக்கப்பட்டது. அது கங்கையாற்றுடன் சோனையாறு கலக்கும் கரை ஓரத்தில், அதன் வடகரையில் எழுப்பப்பட்டது.அது கங்கையிலிருந்து சில கல் தூரத்தில் உள்ள இடமாகும்.

Falling in line with this statement, V.A.Smith the well known professor of Indian History observes as followes: Pataliputra, the imperial capital, which had been founded in the fifth century B.C.,stood in the tongue of land formed by the confluence of the Son with the Ganges, on the northern bank of the former, and a few miles distant from the latter ( vincent A. Smith, *The Early History of India*, pp.127-128 ).

இவை எந்த அளவு சங்கப் பாடல்கள் உண்மை யானவை என்பதை உணர்த்தும். கி.மு.4,5ஆம் நூற்று ஆண்டுகளில் தோன்றியவை சங்கப் பாடல்கள் எனக் கருத, இவை மிக உறுதியான சான்றாகின்றன. இந் நந்தர்களைப் பற்றி, கே.வி.அரங்கசுவாமி அய்யங்கார் எழுதிய இந்திய வரலாற்று நூலின் வழியும் சில உண் மைகள் தெரிய வருகின்றன.

Hence, by the time that the Sisunaga dynasty was over thrown ( about the first half of the fourth century B.C ) by a family of Sudra userpers, known in history as the Nandas, Magadha had become the premier state in northern India and seems to have extended over the entire area watered by the Ganges and its tributories ( p.51 )

நந்தர்களின் ஆட்சிச் சிறப்பை, வரலாற்றை முடிந்த அளவு மறைத்து விட்டனர். மறைக்க முடியாத ஒன்றிரண்டு வரிகளுடன் முடித்து விடுகின்றனர்.

At the time of the Greek invasion the whole of the gangetic plain was ruled by a king named Nanda, who was regarded as the wealthiest and most powerful Indian ruler of the time ( p.73 )

இவ்வாறு செல்வ வளம் மிக்க நந்தர் என்ற கருத்து சங்கப் பாடல்களில் காணப்படுவது முக்கிய சான் றாகும்.

அரங்கசுவாமி அய்யங்கார் அடிக்குறிப்பாகத் தருவன, அக்கால வரலாற்றாசிரியர்களின் ஒருதலைக்

கருத்தாக மட்டுமன்றி, வெறுப்புணர்வுடனும் எழுதப் பட்டனவே, அக்காலப்பகுதி பற்றிய வரலாறு என்பது தெளிவுபடுகிறது.

> Mahapadna Nanda, the first king of the line, is said to have been a Man of low birth, who conquered a good part of Hindustan.

இம் மன்னனே முதலாமவன் என்றும் இறுதியில் ஆண்டவன் என்றும் குழப்புகின்றனர். தமிழ்நூல்கள் குறிப்பது இவனது காலமே. சந்திரகுப்த மௌரியன் சாணக்கியரின் அறிவுரைப்படி நடந்து, நந்தர் ஆட்சிக்கு முடிவுகட்டி மௌரியப் பேரரசு விரிவடைய உதவிய அனைத்தும் விரிவாகப்பேசப்படு கின்றன. கி.மு.321இல் நந்தர் ஆட்சியை வீழ்த்தி, மோரியர் ஆட்சி காலூன்றி யது. இது தொடர்பாக, அய்யங்கார் தரும் அடிக் குறிப்பையும் காண்போம்:

> The success of Chandragupta is attributed in Hindu legend to the loyalty and genius of his Brahman minister, Chanakya, whose name has come to be applied in Indian literature to uncommon skill in diplomacy ( p.74 )

இவ்வாறான வரலாறுகள் முழுமையாக ஆராயப் பட வேண்டும். நந்தர்களுக்கும் தமிழர்களுக்கும் தொடர்பு உண்டா என்பன போன்ற பலவற்றை வடநாட்டு நூல்கள் வழி ஆராய இடமுளது. நந்தர் வரலாற்றை முடிந்தவரை மறைத்து விட்டதை, வெளிக்கொணர நாம் முயலவேண்டும்.

# 15

# மோரியர்

சந்திரகுப்த மௌரியன் வடநாடு முழுவதையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தான். அவன் மகன் பிந்துசாரன் இருந்ததைக் காப்பாற்றினானே தவிர குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் எதுவுமில்லை. அவன் மகன் அசோகவர்த்தனன் தென்னாடு, இலங்கை உள்ளிட்ட எல்லா நாட்டிலும் புத்த சமய உண்மை களைப் பரப்ப சமயக்; குருமார்களை அனுப்பினான்; நினைவுச் சின்னங்களைத் தூண்களாக, பாறைக் கல்வெட்டுக்களாகப் பொறித்து வைத்தான்.

கலிங்கத்தின் மீது படையெடுத்த அவன், அப் போரினால் ஏற்பட்ட அவலங்களைக் கண்டு. மிக வருந்தி, மனம் திருந்தி, அமைதியால் உலகை அர வணைப்பதே பேரரசுக்குப் பெரும் புகழும் தருமெனத் துணிந்தான். அதனால் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றான்.

இளமையிலேயே ஆட்சியேற்று, இந்திய நாட்டின் வடபகுதி முழுவதையும் தன் கட்டளைக்குக் கீழ்க் கொண்டுவந்த சந்திரகுப்தனுக்கு, அந்தணராம் கௌடில்யர் என்ற சாணக்கியரே உறுதுணையாய், மீண்டும் இந்து சாம்ராஜ்யம் தழைக்கவும் புத்த சமண சமயங்கள் பின்வாங்கவும் உதவினார். அவன் தன் நடுவயதின் பிற்பகுதியிலேயே (கி.மு.297) மறைந்தான்.

அவனுக்குத் தென்னாட்டையும் அடிப்படுத்தும் எண்ணம் தோன்றியது. அவன் கலிங்கத்தை வென்று, விந்திய மலைக்குத் தெற்கேயும் படைகளை அனுப் பினான். ஆந்திரர் அன்று இருந்த நிலையில், அவனைத் தடுக்க இயலாமையால், அங்கு சுற்றியிருந்த சிற்றரசுகளையெல்லாம் வென்றான்.

ஆயினும் விந்திய மலையைத் தொடர்ந்து கிடந்த அடர்ந்த காடுகளும் மலைகளும் குன்றுகளும் கடத்தற் கரியனவாயிருந்தன. எனவே ஓரிடத்தில் குன்றுகளை அறுத்து. தரைமட்டமாக்கி, மிகப்பெரிய இடைகழி போன்ற வழியை அமைத்தான். அளவிறந்த யானை, குதிரை, தேர்ப்படைகளை வைத்திருந்த அவன், அவை கடந்து செல்லுமளவு வழியமைத்தான்.

தமிழ்நாட்டின் எல்லையாகிய வேங்கட மலைத் தொடரில் — ஏழுமலைகள் சூழ்ந்த பகுதியில் தமிழ் நாட்டுச் சிற்றரசர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் மோகூர் மன்னனுக்கும் ஒன்றுமொழிக் கோசர் என்று புகழப்பட்ட மன்னனுக்கும் பகைமை இருந்தது. ஆந்திரரை வென்று, மோகூர் மன்னன் தனக்குப் பணி யாமையின், ஆந்திர மன்னருடனும் கோசருடனும் சேர்ந்து, மோகூர் மன்னனுடன் போர் புரிந்த, மௌரியப்படை என்ன ஆயிற்று என்று தெரிய வில்லை. சந்திரகுப்தனின் படையெடுப்பும் அதனோடு நின்றது என்பதை, அதற்கப்பால் அவன் வராமையால் அறிகின்றோம். **மௌரியருடைய தென்னிந்தியப் படையெடுப்பு இறுதியில் ஒரு தோல்வியே. இதன் பயனாக, அவை (தமிழக அரசுள்) அசோகருடைய பேரரசின் பாகமாக அமையவில்லை.** *(ஆர். சத்தியநாத அய்யர், இந்தியப்பண் பாட்டு அரசியல் வரலாறு, பகுதி 1, பக்.127).*

மௌரியர் என்பதைச் சங்கப் புலவர்கள் தமிழ் ஒலிப்படி 'மோரியர்' என்றனர். மோரியர் படை யெடுத்து வந்த இவ் வரலாறு மேலே சுட்டிய விவரங் களுடன் சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளது.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் திரும்பக் காலம் கடந்து போனதால், வருந்திய தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறும் கட்டம் இது. உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார் பாடிய அகப்பாட்டு.

தோழியின் ஆறுதலுரையில்,

**விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்**
**பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த**
**அறை இறந்து அகன்றனராயினும் எனையதூஉம்**
**நீடலர் வாழி தோழி! (அகம்.69)**

என்று வருகிறது. விண்ணைத் தொடும் பெரிய மலை களிலும் ஓடவல்ல தேர்ப்படையையுடைய மோரியர், இரும்பொன்னாற் செய்த (இரும்பு) தங்கள் தேர்ச் சக்கர உருளைகள் தடையின்றிச் செல்ல, குன்றுகளை (அறை—குன்று) வெட்டிக் குறைத்த வழியிலே, தலைவர் வாணிகத்தின் பொருட்டு வடநாட்டிற்குச் சென்றன ராயினும் நின் அழகிய மார்பிடைத் துயில்வதை மறந்து, அங்கே தங்கமாட்டார்; இனியும் காலம் நீட்டிக்காது வந்துவிடுவார். அதனால் வருந்தாதிரு.

முன்னதைப் போலவே, தலைவியை ஆற்றுவிக்கும் கூற்றாக, மாமூலனார் பாடும் அகப்பாட்டிலும் இதே செய்தி வருகிறது.

**வெல்கொடித்**
**துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்**
**தொன்மூதாலத்து. அரும்பணைப் பொதியில்**
**இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்**
**தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்**

பணியாமையின், பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள்ளருவிய அறைவாய்.... (அகம்.251)
மாமூலனார்

கோசர் என்பார் வெல்லும் கொடியினை உடையவர். துனை—விரைவு, கால்—காற்று. விரைந்தோடும் காற்றுப்போன்ற, அணி செய்யப்பெற்ற தேரினை உடையவர். அவர்களுடைய மிக முதிர்ந்ததும் கிளை களையுடையதுமாகிய ஆல மரம் நிற்கும் பொதியில் எனும் பொது மன்றத்தே, இனிய ஓசையுடன், குறுந்தடி கொண்டு அடித்தலால் முரசு ஒலிக்கப் பகைவர் களுடன் போரிட்டு அழித்தனர் (கடிப்பு—குறுந்தடி, இகுத்து—அடித்து). அப்போது மோகூர் மன்னன் பணிய மறுத்தான்.

அச்சமயத்தில் புதிய மன்னர்களாகிய மோரியர் தென்னாடு நோக்கிப் படையெடுத்து வந்தனர். (வம்ப மோரியர்—புதியவர்களாகிய மோரியர்) மிகப் பெரிய குதிரைப்படைகளையுடைய அவர்கள், தங்களின் அழகிய தேர்ப்படையின் உருளைகள் வருதற்காக, அருவிகளையுடைய குன்றுகளை வெட்டி வழி யுண்டாக்கினர் (அவ்வழியைக் கடந்து வடக்கே வாணிகம் செய்யச் சென்ற தலைவன், அங்கு நந்தனின் செல்வமே கிடைத்தாலும் தங்கமாட்டான், விரைவில் வந்துவிடுவான்). சந்திரகுப்தனின் படைப் பெருக்கத்தை கே.வி.அரங்கசாமி அய்யங்கார் கூறுகிறார் : 6இலட்சம் படைவீரர்கள், *30* ஆயிரம் குதிரைகள், *9* ஆயிரம் யானைகள், கணக்கற்ற தேர்கள், கப்பற்படை, (மேலது பக்.*76*). சங்கப் பாடல்கள் மோரியரின் படைவலிமை யைக் கூறுவதுடன் ஒப்பிடற்பாலது.

அப் பொதியில் இருந்த, மிக முதிர்ந்த, பழைய ஆலமரத்தடியில், சொன்னசொல் தவறாது முறை செய்யும் (நீதி கூறும்) உண்மை யுடையவராதலின் ஒன்று மொழிக் கோசர் என்ற பட்டப் பெயர் தோன்றியது. அவர்கள் ஒருகாலத்தில் தங்களுக்கு உதவியாக இருந்ததை முன்னிட்டு, அசோகன் தன் பாறைக் கல்வெட்டு ஒன்றில், சேர, சோழ பாண்டிய ருடன், சத்தியபுத்திரர் என இக் கோசரையும் சேர்த்து, நட்பு நாட்டினராகக் குறித்துள்ளான்.

தலைவன் பிரிவால் வருந்திக் தோழியிடம் தலைவி கூறுவதாகவும் ஓர் அகப்பாடலை மாமூலனார் பாடி யுள்ளார். அதிலும் இவ் வரலாற்றுக் குறிப்பு,தெளிவாக வருகிறது.

**கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை**
**முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்**
**தென்திசை மாதிரம் முன்னிய விரவிற்கு**
**விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து**
**ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த**
**அறைஇறந்து அவரோ சென்றனர்.... (அகம்.281)**
**மாமூலனார்.**

கனைகுரல்—மிகுந்த ஒலியெழுப்பும், கணை—அம்பு. அத்தகைய வில்லாற்றலில் வல்ல, பகையுணர்ச்சி மிக்க வடுகர், தமக்குத்துணையாக முன்னே செல்ல, மோரி யர் படையெடுத்து வந்தனர். மோரியர் தென் திசை நாடுகளைப் பற்ற எண்ணிப் படையெடுத்து வந்த தற்குத் தடையாக விண்ணுற ஓங்கிய பனிபடர்ந்த பெரிய குன்றங்கள் இருந்தன. அதனால் ஒளி பொருந் திய தேர்ச் சக்கரங்கள் தடையின்றி உருண்டு செல்ல, அறைகளாம் பாறைகளை வெட்டிக்குறைத்து உண் டாக்கிய வழியைக் கடந்து நம் தலைவர், வடதிசை

நோக்கிப் பொருள் வயிற் பிரிந்தார். (தான் பிரியேன் என்ற சொல் பழுதுபடுமே என்றும் எண்ணாமல், இவ்வழியே போய்விட்டாரே,யான் என்ன செய்வேன் ?).

இதில் மோரியர் தென்திசை நாடுகளையும் அடிப் படுத்தப் புறப்பட்டு வந்தமை தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

புறநானூற்றில், கள்ளில் ஆத்திரையனார் ஆதனுங் கனது கொடைத் திறத்தை — அறநெறி வாழ்வை — அதன் நிலை பெற்ற தன்மையைப் பாராட்டிப் பாடு கின்றார். அதற்கு மோரியர் அமைத்த வழியினது அருமை பெருமையை — நிலைபெற்ற தன்மையை உவமை கூறுகின்றார்.

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்

**திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த**
**உலக இடைகழி அறைவாய் நிலைஇய**
**மலர்வாய் மண்டிலத்து அன்ன....** (புறம்.175)

வானளாவும் கொடி கட்டிய தேர்ப் படையை உடைய மோரியர், தங்கள் திண்ணிய ஒளி பொருந்திய தேர் உருளைகள் சென்று திரும்புமாறு வெட்டி உண்டாக் கியது, வடதிசை நாடுகளுக்குப் போகும் வழியானது. இவ்வாறு குன்றத்தின்கண் நிலையாகப் பின்னரும் தங்கிவிட்ட அகன்ற வாயையுடைய நிலைத்த வழியைப் போன்று நிலைத்த அறநெறி வாழ்வும் பலரைப் புரக் கும் கொடைக் குணமும் உடையவன், ஆதனுங்கன்.

'உலக இடைகழி' (சிலம்பு 10—27). இதற்கு அடி யார்க்கு நல்லார், உலக இடைகழி—ஊர்வாயில்— இடையே கழிதலின், அவ்வாயில் இடைகழியாயிற்று, என விளக்கம் எழுதுகின்றார். பெரிய நீண்ட மலைத் தொடரின் இடையே வெட்டி அமைக்கப்பட்டதாதலின்

'இடைகழி' எனப்பட்டது. உலகம்—ஊர்மக்கள் அதாவது போருக்காக உண்டாக்கப்பட்ட அவ்வழி, பொது வழியாக நிலை பெற்று விட்டது என்பது கருத்து.

புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் பல இடங்களில், தமக்கு விளங்காதவற்றிற்கு, நமக்கும் விளங்காத படி ஏதேதோ எழுதிவிடுகின்றார். அதில் இதுவும் ஒன்று.

இத்துணைச் சான்றுகளிலிருந்தும் ச.வையாபுரியார், 'ஔரஸ்' என்ற சொல்லையே, மோரியர் என்று சங்கப் புலவர்கள் குறித்து விட்டனர் என்பார். ஔரஸ் என்றால் ஒளியுடையவர் என்று பொருளாம்! அவரது மனத்தில் வடமொழியே உயர்ந்தது; தமிழ் கடன் பெற்றது என்ற கருத்துப் பதிந்து போனதால், வெள்ளிடை மலை எனப் பல பாடல்களில் வரும் மோரியர் என்பதையே மாற்றிக் கூறித் தம் ஒரு சார்புத் தன்மையை நிலைபெறச் செய்துவிட்டார்.

இதனால் சங்க—அவையப் பாடல்கள் பலவும் கி.மு.நான்காம் நூற்றாண்டில் பாடப்பட்டன என்பது உறுதிப்படுகின்றது.

தமிழர்களின் பொருள்வயிற் பிரிவு

பாலைப் பாடல்கள் காட்டும் காலக் குறிப்பு

கி.மு.நான்காம் நூற்றாண்டு முதல், தமிழக வணிகர்கள் இந்த, மோரியர் அமைத்த வழியிற் செல்வது எளிதாகலின், இதனையே பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு முன்னர் அவர்கள் இவ் வழியைக் கடக்கப் பெரும்பாடு பட்டிருப்பர்.

**மோரியர்**
**பொன்புனை திகிரி திரிதாக் குறைத்த**
**அறை இறந்து அகன்றனர்** **(அகம்.69)**

மோரியர் அமைத்த வழியில் தலைவன் பிரிந்து சென்றான்.

> **மோரியர்**
> **...உருளிய குறைத்த...**
> **அறைவாய் .. உம்பர் ..**
> **நிரம்பா நீளிடைய் போகி (அகம்.251)**

மோரியர் அமைத்த நீண்ட வழியில் சென்று.

> **மோரியர் ... உருளிய குறைத்த ...**
> **அறை இறந்து அவரோ சென்றனர்... (அகம்.281)**

அதே வழியில் தலைவன் சென்றமை பற்றிய இதனை இங்கு மிக விரிக்கத் தேவை இல்லை. நூற்றுக் கணக்கான பாடல்களில், தமிழரின் வடநாட்டு வணிகப் பயணம் வருகிறது. பேரறிஞர் மு.வ.அவர்களின் 'ஓவச் செய்தி' நூலை வாங்கிப் படித்துப் பாருங்கள். பாலைப் பாடல்கள் பலவற்றில் வரும் இச் செய்தி, மோரியர் ஆண்ட, கி.மு.நான்காம் நூற்றாண்டு முதல், இவ்வழியாகத் தமிழர்கள் வடநாட்டிற்கு வணிகத்தின் பொருட்டுப் போய்வந்த வரலாறு மிகத் தெளிவாகப் பாடப் பெற்றுள்ளது.

அவையப் பாடல்களைப் பிற்காலத்தன என்று சொல்வதையே, தம் நடுநிலை பிறழாத ஆராய்ச்சி என்று, வலுவற்ற தம் மார்பைத் தட்டுபவர்கள், மேலே நாம் காட்டிய அனைத்துச் சான்றுகளையும், தக்க காரண காரியத்துடன் மறுக்க முன்வரவேண்டும். அதுவே எம் விருப்பமாகும்.

# தொகுப்புரை

*1.* தொல்காப்பியம் — பனம்பாரனார் பாயிரம்

உலகின் முதல் இலக்கிய வரலாறு - சில சொற்களில் எழுதப்பட்ட நெடிய வரலாறு.

நிலந்தரு திருவிற்பாண்டியன் - காரணப் பெயர் கடல் கோள்களை உணர்த்தும் சான்று. செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல்கள் இருந்தமை. அரங்கேற்றம்-அவையம் (சங்கம்) என ஓரமைப்பு இருந்தமை. வடமொழித் தொடர்பு இருந்தாலும், அதனால் பாதிப்பு ஏற்படாமல், தமிழின் தனித்தன்மை காக்கப்பட்டமை.

இப் பாண்டியன் மாகீர்த்தி, வடிம்பலம்பநின்ற பாண்டியன் எனக் காலந்தோறும், தொன்மமாக நினைவு கூரப்பட்டமை.

*2.* இறையனார் அகப்பொருளுரை

பத்துத் தலைமுறைக்கு வாயால் உரைக்கப்பட்டு பாடம் சொல்லப்பட்டு, தொன்மப் பழங்கதையாய் வளர்ந்தாலும் அடிப்படை உண்மையை உணர்த்தி யமை. கேள்விப் பட்டதைச் சொல்லும் நடைப்பாங்கு. உரை என்பதன் பொருள்; பாடம் செய்தாயா என்று, மனப்பாடம் செய்வதைக் கூறும் வழக்காறு. முச்சங்க உண்மை - கடல்கோள்கள் - பாண்டியர் தலைநகரங் கள் - அரசப்புலவர்கள் - தலைமை இலக்கண நூல் கள் - மறைந்து போன தமிழ் நூல்கள்.

காவிரிப்பூம் பட்டினத்தில் யவனர் குடியிருப்பு இருந்துளது.

> கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
> பயனற வறியா யவனர் இருக்கையும் (சிலம்பு 5:9-10)

புகார் நகரில், காவிரி கடலொடு கலக்குமிடத்தின் பக்கத்தே, காண்பவரைத் தடுக்கவல்ல செல்வ வளமிக்க, பயன்பாடு குறையாத யவனர் குடியிருப்பு இருந்தது. அடியார்க்கு நல்லார் இதற்கு, புகார் முகப்பாக்கங்களில் தம்மைக் காப்போர் கண்களை மேற்போகவிடாமல் தடுக்கும் பயன் தொலைதலை யறியாத மிலேச்சர் இருக்குமிடங்களும் என விளக்கம் எழுதுகின்றார்.

# 16

## யவனர்

கிரேக்க நாட்டில் 'அயோனியர்' எனப்படும் பகுதியர் தமிழ்நாட்டுடன் தொடர்புகொண்டிருந்தனர். தமிழர்கள் அவர்களை 'யவனர்' என அழைத்தனர். இவர்களைத் தமிழர்கள் கடல்கடந்து சென்று, வென்று உள்ளனர்.

குமட்டூர்க் கண்ணனார், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனை, இரண்டாம் பத்தில் பாடியுள்ளார். அதின் பதிகத்தில்,

> பேரிசை மரபின் ஆரியர் வணக்கி
> நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
> நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
> அருவிலை நன்கலம் வயிரமொடுகொண்டு
> பெருவிறல் மூதூர்த் தந்து

என வருகிறது. இதில் ஆரியரையும் யவனரையும் வென்று, சிறைப்பிடித்த செய்தி வருகிறது.

சிலப்பதிகாரத்தில்

> வன்சொல் யவனர் வளநா டாண்டு
> பொன்படு நெடுவரை புகுந்தோ னாயினும் (28-141-142)

என்றும், ஊசல்வரியில்,

> வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
> தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
> மன்பதை காக்கும் கோமான் (29)

என்றும் சேரர் புகழப்படுகின்றனர்.

யவனர்கள், மேறகுக் கடலோரத்திலிருந்த, முசிறித் துறை முகத்திற்கு, தங்களுடைய தொழிற் சிறப்பு மிக்க மரக்கலங்களில் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து, 'கறி' எனப்படும் மிளகை வாங்கிச் சென்றுள்ளனர்.

சேரலர்

சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடுபெயரும்
வளங்கெழு முசிறி (அகம். 149)

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

யவனர் மரக்கலம் செய்வதில் வல்லுநராதலின், கை வினைச் சிறப்புமிக்க பாய்மரக் கப்பல் எனப்பட்டது. நுரைகலங்க, கலம் விரைந்து வந்தது. பொன்னைக் கொடுத்து, கறியை வாங்கிச் சொன்றது (கறி—மிளகு).

இறைச்சி உணவுக்குச் சுவையூட்ட கறி—மிளகு மிகவும் பயன்பட்டுள்ளது. இன்றும் சில வட்டாரத் தினர் 'கறி' என்று இறைச்சியை மட்டுமே சுட்டுவர்.

யவனர்களின் மது—தேறல் மிகுந்த சிறப்புடையது போலும். தமிழர்கள் அதைப் பருகுவதில் மயக்கம் கொண்டிருந்தனர். மன்னர்களுக்கு கேட்கவேண்டுமா?

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறனை வாழ்த்திப் பாடுகின்றார்.

யவனர்
நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற! (புறம் 56)

இத் தண்கமழ் தேறல் பற்றிய குறிப்பு, பல பாடல் களில் வருகிறது.

வாயில் காவலர்

யவனர் மிகுந்த உடற்கட்டுடன் இருந்துள்ளனர். படைவீரர் போல உடையுடுத்தியுள்ளனர். அதனால் அவர்களை அரண்மனைகளிலும் கோட்டை வாயில் களிலும் காவலர்களாக நிறுத்தியுள்ளனர்.

**மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை**
**மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து**
**வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்**
**புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்**
**திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண்**
**எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்**
**உடம்பின் உரைக்கும் உரையா நாவின்**
**படம்புகு மிலேச்சர் உழையர் ஆக.... (முல்லை:54-66)**

பாடி வீட்டில், போர் நடக்குங் காலை, இரவு மன்னன் துயிலும்போது, யவனக் காவலர், அப் பள்ளி யறையைச் சுற்றிச் சுற்றி வந்து காக்கின்றனர்.

மத்திகை—சம்மட்டி, அதனைத் தாங்கும் உடை. மேலே மெய்ப்பை அணிந்திருத்தல். வெருவரும் தோற்றம்—அச்சந்தரும் தோற்றம். வலுவான உடலை யுடைய யவனர். புலிச்சங்கிலி கட்டிய, பாடி வீட்டில், விளக்கேற்றி, திரையிடப்பட்ட உள்ளறையிலே, மொழி தெரியாததால், உடம்பின்வழி சைகை மூலம் பேசும் மிலேச்சர்களாம் காவலர் உழையராய்—பக்கத்தவராய்ச் சுற்றித் திரிந்து, இரவு முழுவதும் காக்கின்றனர்.

நெடுநல்வாடையில் இவர்கள் மெய் காப்பாளர் களாகக் காட்டப்படுகின்றனர்.

**மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்**
**ஆறுகிடந் தன்ன அகல் நெடுந் தெருவில்**
**படலைக் கண்ணிப் பருஏர் எறுழ்த் திணிதோள்;**
**முடலை யாக்கை முழுவலி மாக்கள்**

வண்டு மூசு தேறல் மாந்தி, மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார் பகலிறந்து
இருகோட்டு அறுவையர் வேண்டுவயின் திரிதர
(நெடுநல்:29-35)

மாடமாளிகை ஓங்கிய வளமான பழைய ஊரிலே, ஆறு போலக் கிடந்த அகன்ற நீண்டதெருவில் பசுந்தழையாலான மாலையினையும் பருத்த அழகிய வலிய திண்ணிய தோளினையும் முறுக்கமைந்த உடலினையுமுடைய முழுவலிமிக்க மிலேச்சர்கள் (யவனர்), வண்டு மொய்க்கும் புதுத் தேறலாம் மதுவை உண்டு மகிழ்ந்து, தூற்றல்போடும் மழைத் துளிகளைப் பற்றிக் கவலைப்படாமல், பகலிலும் காத்து, இரவிலும் மேலாடையும் இடுப்பிலாடையுமாக இரண்டு உடைகளை இறுக அணிந்தவராய், காவலுக்குச் சுற்றிச்சுற்றிவர.

அங்கும் இங்கும் சுற்றிக் காவல் காக்கின்றனராம்.

மதுரையில் கோட்டை வாயிலை இவர்கள் காக்கின்றனர். புதியவனாக, மதுரைக்குள் கோட்டை வாயில் வழியாகப் புகும் கோவலன்,எங்கே காவலர்கள் ஐயப்பட்டு ஏதாவது கேட்டுவிடுவார்களோ என அஞ்சி, அவர்கள் ஐயப்படாதபடி உள்ளே புகுந்தானாம். கடி மதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு என்பார் இளங்கோவடிகள். *(14:66,67)*

இவ்வாறு வரும் யவனரைப் பற்றிய குறிப்புக்கள் மேலும் பலவுள.

தமிழகத்தில் தொல்பொருளாய்வில், யவனர் பற்றிய பல சான்றுகள் கிடைத்துள்ளன. அரிக்காமேடு, ஆதிச்சநல்லூர் போலும் இடங்களில் கிடைத்துள்ள தாழிஓடுகள் போல்வன, யவனர் பற்றிய தொடர்பைக் காட்டுவன. கிரேக்கப் பயணிகளாகிய பிளினி *(கி.பி.24—79)* தாலமி *(கி.பி.150)* போல்வார் எழுதி வைத்துள்ள

குறிப்புகளும், மேலைக் கடற்கரை சார்ந்த முசிறி, தொண்டி பற்றி அவர்கள் குறித்திருப்பனவும் பிறவும் புறச் சான்றுகளாக அறியத் தக்கன. உரோம நாணயங் களும் பொற்காசுகளும் கிடைத்துள்ளன.

தமிழர்களின் கடல்வாணிகம் பற்றிய செய்திகள் முழுமையாய்த் தொகுக்கப்படவேண்டும்.

தீக்கடை கோலால் கலங்கரை விளக்கம் அமைத்துக் கப்பல்களுக்கு வழி காட்டியதைப் பெரும் பாணாற்றுப்படை *(346—51)* கூறுகிறது.

பெரிய கப்பலில் வந்த பொன் முதலியவற்றைத் தோணிகளால் கரைசேர்த்ததைப் புறப்பாட்டொன்று பகர்கிறது. ‘கலம் தந்த பொற்பரிசம், கழித்தோணியான் கரை சேர்க்குந்து’ என்று கூறப்படுதல் காண்க *(343)*. கடல்வணிகம் பற்றி, பட்டினப் பாலை விவரிப்பன மிகப்பல. அவை இன்றைய நாகரிக வளர்ச்சியுடனும் ஒப்பிடற்பாலன; உச்சத்தைத் தொடுவன.

‘உலகு’ கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்’ என்ற அடி, கப்பல் எவ்வளவு பெரியதாய்க் கட்டப்பட்டது என்பதைக் காட்டுகிறது *(அகம்.255)*. இக் கலங்கள் மூலம் குதிரைகளும் இறக்குமதி செய்யப்பட்டன *(பெரும்பாண்.391—93, மதுரைக் 321—23, பட்டினப்.185)*.

மாறோகத்து நப்பசலையார் சேரர்களது கடல் வழிக் கலம் செலுத்தும் ஆற்றலை, வேறு எவரும் மிஞ்சமுடியாதபடி இருந்ததெனக் கூறுகிறார்.

**சினமிகு தானை வானவன் குடகடல்**
**பொலம்தரு நாவாய் ஓட்டிய அவ்வழி**
**பிறகலம் செல்கலாது அனையேம்** **(புறம். 126)**

கிரேக்கர்களுக்கு இணையாகத் தமிழர்கள் கடல்வழிச் செலவில் சிறந்து விளங்கினர்.

கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தி யார் பாடிய புறப்பாடலில் *(66)*

> **நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி**
> **வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!**

என்று அவனது முன்னோனைப் புகழ்ந்து, அவன்வழி வந்தவனே என விளிக்கின்றார். இதற்குப் பழைய உரையாசிரியர் நீர் செறிந்த பெரிய கடலின் கண்ணே, மரக்கலத்தை ஓட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாய் ஓடாதாக, ஆண்டு வளிச் செல்வனை (காற்று) அழைத்து ஏவல்கொண்ட வலியோன் மரபினுள்ளோனே என்று புராண விளக்கம் போல எழுதியுள்ளார்.

இதன் நேர்பொருள் 'வளிதொழில் ஆளுதல்' என்றால், வளியை *(காற்றை)* ஏவல் கொள்ளுதல் என்பதாகும். காற்றடிக்கும் திசையை வைத்துக் கலங்களைச் செலுத்தி, அக் காற்றைத் தங்கட்கு உதவுமாறு செய்த வலிமையையே இது சுட்டும்.

கிரேக்கப் பயணி ஹிப்பாலஸ் என்பவன் கிழக்கு நோக்கி வீசுகின்ற காற்றைப் பயன்படுத்தி, அப் பருவத்தில் புறப்பட்டு முசிறித் துறைமுகத்தை அடைந்தானாம். பலமாதங்கள் பயணம் செய்ததை மாற்றி, நாற்பதே நாள்களில், தமிழக மேற்குக் கடற்கரையை அடைந்தானாம். இதற்காக அக் காற்றுக்கே 'ஹிப்பாலஸ்' என்று பெயரிட்டு இன்று உலகக் கலைக் களஞ்சியங்களில் எல்லாம் அவன் பெயரே வழங்குகிறது.

நம் சோழன் பெயர் நம்மவர்க்கே தெரியாது. 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டிய' நம்மாலேதான் நாவாய் கிரேக்க, இலத்தின் மொழிகளில் எல்லாம்

ஏறி, இன்று ஆங்கிலத்திலும் நேவி (Navy) என்று வழங்குகிறது. ஆனால் நாம் நம்மைப்பற்றி, உலகிற்கு இன்றளவும் அறிவித்தோமில்லை. (Pliny state that if the wind called Hippalus be blowing, musiri, the nearest mart of India can be reached in forty days ' - J.W.Mecrinale, *op.cit.*, pp.111,112 ).

இந்திய வரலாற்றாசிரியர்களால், தமிழின வரலாறு மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டுவிட்டது. ஒரு சிலர் உண்மை சொன்ன வர்களையும் நாம் கண்டுகொண்டோமில்லை.

ஓரளவு சங்கச் செம்மொழிச் செவ்வியல் நூல் களின் வழி கிடைக்கும், மேலோட்டமான — இன்றி யமையாத அகச் சான்றுகள் மட்டும் இங்கத் தொகுத்துத் தரப்பட்டன.

இது ஒரு முன்னோடி முயற்சியே. இன்னும் தொகுப்பதற்கு அகச் சான்றுகள் மிகப்பலவுள.

புறச்சான்றுகளாகக் கல்வெட்டு, செப்புப் பட்டயம், நாணயவியல், தொல்பொருளாய்வு, அகழாய்வு, வெளிநாட்டார் குறிப்பு, நம்நாட்டிலீர் தந்துள்ளவை, வடநாடு முதலான பிறநாடுகளில் தேடக்கூடிய கள ஆய்வுகள் என எண்ணற்றவை உள. ஆயிரக் கணக்கில் களஞ்சியமாகத் தொகுக்கலாம்.

வடமொழியில் ஏறியுள்ள தமிழ்ச்சொற்கள், கன் னடத் தமிழ்ச்சொற் களஞ்சியம், மலையாளத் தமிழ்ச் சொற்களஞ்சியம், தெலுங்குத் தமிழ்ச்சொற்களஞ்சியம், துளுகுடகு சொங்கணித்தமிழ் சொற்களஞ்சியம், வட மொழிமயமாக்கப்பட்ட கிரந்தம் பாலி, அர்த்தமாகதி போன்ற மொழிகளில் கலந்துள்ள தமிழ்ச்சொற் களஞ்சியம் இவை அனைத்தும் பின்பற்றியுள்ள தமிழ் இலக்கண, இலக்கியக் கோட்பாடுகள், இவை அனைத்

திலும் இன்றும் வழங்குகின்ற தமிழர்தம் நாட்டுப் புறக்கலைகளின் தொகுப்புக்கள் என நாம் செய்ய வேண்டிய பணிகள் நிரம்பவுள.

வலுக்கட்டாயப்படுத்திக் 'கன்னடத்தை'யும் செம் மொழி என அறிவிக்கச் செய்து, அதற்கு அந்த மாநில அரசே 28 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என் பதைக் கேள்விக் படும்பொழுதே தமிழுக்கும் அத் தகையதொரு 'பொற்காலம்' வாராதா என்ற ஏக்கப் பெருமூச்சு வெளிப்படுகின்றது.

17

# தமிழர்களின் கடல் வாணிகச் சிறப்பு

பெரும்பாணாற்றுப் படையில்,

**யவனர்**
**ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட**
**வைகுறு மீனின்** (பெரும்பாண் 3:317)

என்று யவனரின் ஓதிம விளக்கு (அன்னப் பறவை போல் நிற்பது) கூறப்படுகின்றது. பாண்டியனின் அரண் மனையில், அந்தப்புரத்தில், திரி எரியுமாறு இடை விடாது நெய்பெய்து. பாவை விளக்கு என்று ஒளிவீசிக் கொண்டே இருந்ததாம்.

**யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
**கையேந்தும் ஐஅகல் நிறைய, நெய்சொரிந்து**
(நெடுநல்:101-102)

ஒரு பாவை, விளக்கொன்றைக் கையில் ஏந்தி இருப்பதுபோல், நல்ல வேலைப்பாட்டுடன் செய்யப் பட்டுள்ளதாம்.

இத்தகைய கைவினைப் பொருள்களையும் யவனர் கொண்டுவந்து விற்றுள்ளனர்.

ஒருகாலத்தில் 'நெருப்பு' அரிய பொருளாகக் கருதப்பட்டது. பிறிதொரு காலத்தில் உப்பு கிடைத் தற்கரிய பொருளாக விற்கப்பட்டது. 'நெல்லும் உப்பும் நேரே ஊரீர்' என்றல்லவா விற்றுள்ளார்கள். கிரேக்க

3. அடியார்க்கு நல்லார் உரை

சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார்உரை. இறையனார் களவியல் உரையின் தொடர்ச்சி - கடல் கொண்ட தென்னாடு பற்றிய விரிவான விளக்கம் - 49 நாடுகள் இருந்தமை. தமிழர் இழந்த நிலப் பரப்பையும் நூல்களையும் இலக்கியச் செல்வத்தையும் உணர்த்தும்.

4. புறநானூறு

புறநானூற்றில் வரும் 'நிலந்தரு திருவின் நெடியோன்' பற்றிய செய்திகள். மதுரைக்கும் தமிழுக்குமிருந்த நெடிய தொடர்பு - அவையம் பற்றிய குறிப்புகள்.

5. கலித்தொகை

கலித்தொகையில், இளவேனிலில் மக்கள் கூடிய, மன்னனின் அவையத்தில் ஆண்டுதோறும் புதிய நூல்கள் அரங்கேற்றப் பெற்றமை. அவற்றை மக்கள் கேட்டு மகிழ்ந்தமை. அவையம் இருந்தமைக்கு அசைக்கமுடியாத தக்க சான்று.

6. சிலம்பு-கயவாகுமன்னன்

சிலப்பதிகாரத்தில் இலங்கை மன்னன் முதற் கயவாகு பற்றிய குறிபபு வருதல்; இலங்கை மகாவமிச வரலாற்று நூலுடன் ஒப்புமை. கால ஆய்வுக்கு ஏற்புடைய சான்றாதல்.

7. பாரதப்போர்

பாரதப் போரில், இருதிறப் படைகளுக்கும் பெருஞ் சோற்று உதியன் சேரலாதன், இன்றைய செஞ்சிலுவைச் சங்கம் போல, பெரும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உணவளித்துப் போற்றியமை. புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரச் சான்றுகள்.

*8. இராம கதை*

அகநானூற்றிலும் புறநானூற்றிலும் வரும் இராமகதை பற்றிய புதிய குறிப்புகள்.

*9. சிபிச்சக்கரவர்த்தி*

புறாவின் இடுக்கண் தீர்த்த சிபிச்சக்கரவர்த்தி, சோழனின் முன்னோன் என வரும் பல்வேறு இலக்கியக் குறிப்புக்கள்.

*10. காப்புணர்ச்சி*

தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, சிலப்பதிகாரம் - ஆகியவற்றில் காணப்படும் காப்புணர்ச்சி, திட்டமிடல், கூட்டு முயற்சி, மீட்டுரு வாக்கம், தொகுப்புக்கலை - இவையும் பழைமைக்குச் சான்று. கடல்கோள் அழிவால் எழுந்த காப்புணர்ச் சியின் விளைவுகள்.

*11. இந்திய ஒருமைப் பார்வை*

புறநானூறு, சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து - போலும் நூல்களில் காணப்படும், இந்திய ஒருமைப் பார்வை - இந்தியாவை ஒரே நாடாகப் பார்க்கும் பார்வை, முன்பு இந்திய நாடு முழுவதும் தமிழர்கள் பரவி இருந்தமையால் ஏற்பட்ட எதிரொலிகளேயாம்.

*12. சிலம்பு - நூற்றுவர் கன்னர்*

சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் வடநாடு செல்ல, கங்கையாற்றைக் கடக்க வேண்டியிருந்தது. அக்காலத்து. சாதவாகன அரசு - சதகர்னீஸ் என்பார் நடுநாட்டை ஆண்டதால், அவர்கள் உதவியுடன், சேரன் கங்கையைக் கடந்த செய்தி வருகிறது. அவர் களை இளங்கோ நூற்றுவர் கன்னர் என்று அழகிய தமிழிற் குறிப்பிடுகின்றார். அவர்களுடைய நாணயங்

களில் சேரரின் வில்லும் தமிழ் எழுத்துக்களும் இருப்பது, இதை உறுதிப்படுத்துகிறது. தினமலர் இரா.கிருஷ்ணமூர்த்தி இந் நாணயத்தைக் கண்டு விளக்கியுள்ளார்.

13. நந்தர்கள்

அவையப் பாடல்களில் நந்தர் பற்றி வரும் குறிப்புகளும், இந்திய வரலாறும் ஒத்துப்போகின்றன. இவர் கள் காலம் கி.மு.5ஆம் நூற்றாண்டு முதல் நான்காம் நூற்றாண்டு வரையாகும்.

14. பாடலிபுத்திர நகரம்

பாடலிபுத்திர நகரம் - தமிழ் இலக்கியச் சான்று, வி.ஏ.சுமித்தின், இந்தியத் தொடக்க கால வரலாற்று உடன் ஒத்துப்போவது, மிகப்பெரிய, அசைக்கமுடியாத நற்சான்று.

15. மோரியர்

மோரிய மன்னர்கள் பற்றித் தமிழ் அவையப் பாடல் களில் வருவன, இந்திய வரலாற்றுடன் ஒத்துப்போதல்.

16. யவனர்

யவனர் பற்றிய குறிப்புக்கள் - தமிழக அகழ்வாய்வுகள் - உரோம நாணயங்கள் - கிரேக்கத் தாழிப் பானை ஓடுகள் - கைவினைப் பொருள்கள் - யவனர் குடியிருப்பு - அவர்கள் பொன்னொடு வந்து ‘கறியொடு’ திரும்பியமை - வாயில் காவலர்கள் - கிரேக்கப் பயணிகளின் குறிப்புக்கள்.

17. தமிழர்களின் கடல் வாணிகச் சிறப்பு

தமிழர்களின் கடல் வாணிகச் சிறப்பு - ஹிப்பாலஸ் என்ற கிரேக்கப் பயணியின் சிறப்பு - கரிகாலன் முன்னோர் ‘வளிதொழில் ஆண்ட’ குறிப்பு.

18. நந்தர், மோரியர், பாடலிபுத்திரம் பற்றிய குறிப்புக்களால், சங்கப் பாடல்களின் கால முதல் கி.மு.5ஆம் நூற்றாண்டும் நான்காம் நூற்றாண்டும் என்பது உறுதிப்படுதல்.

19. யவனர் குறிப்பு, சிலம்பில் வரும் கயவாகுமன்னன் குறிப்பு, சாதவாகன சதகர்னிகளினகுறிப்பு - இவற்றால் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை இவை தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது உறுதிப்படல்.

20. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குமுன், கி.மு.7ஆம் நூற்றாண்டளவில் தொல்காப்பியம் தோன்றியிருக்கும் என்ற அறிஞர்கள் கருத்து, இவற்றால் ஏற்கத் தக்கது ஆதல்.

இவை ஓரளவு சான்றுள்ள வழி நிறுவத்தக்க முடிபுகளாகும்.

# ஆசிரியர் குறிப்பு

இராம. பெரிய கருப்பன் என்னும் இயற்பெயரினராகிய பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்கள் 12.08.1928 இல் சிவகங்கை மாவட்டம் நெற்குப்பை என்னும் சிற்றூரில் இராமசாமி-கல்யாணி ஆச்சி இணையருக்குப் பிறந்தவர்.

***கல்வி***



மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, திருவையாறு அரசர் கல்லூரி களில் பயின்று, தமிழ் வித்துவான் (1948) பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகம் வழி இளங்கலை (பொருளியல்) (1948), முதுகலைத் தமிழ் (1961) பட்டங்களும் பெற்றார். மதுரைத் தியாகராசர் கல்லூரி யில் விரிவுரையாளராகப் பணியாற்றிய போது *சங்க இலக்கிய மரபுகள்* குறித்து ஆய்வுசெய்து முனைவர் பட்டம் (1969) பெற்றார். முனைவர் சி. இலக்குவனாரும், முனைவர் அ. சிதம்பரநாதனாரும் இவர்தம் ஆய்வு நெறியாளர்கள் ஆவர்.

***ஆசிரியப் பணி***

காரைக்குடி மீ. சு. உயர்நிலைப்பள்ளியில் பதின்மூன்று ஆண்டுகள், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பத்து ஆண்டுகள், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பதினெட்டு ஆண்டுகள், பல்கலைக்கழக நல்கை ஆணையச் சிறப்புநிலைப் பேராசிரியராக இரண்டு ஆண்டுகள் என மொத்தம் நாற்பத்து மூன்று ஆண்டுகள் ஆசிரியப்பணி ஆற்றியவர் அவர். பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் தேசியப் பேராசிரியராக நியமிக்கப் பெற்ற முதல் தமிழ்ப்

பேராசிரியர் என்னும் பெருமைக்கு உரியவரும் அவரே ஆவார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அறிஞர் மு.வ., அறிஞர் வ. சுப. மாணிக்கம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்களின் சீர்மிகு தலைமையில் பணியாற்றியவர் அவர். தமிழ்த் துறையின் தலைமையை அவர் அணிசெய்த காலத்தில், அவரது சீரிய முயற்சியால், தமிழறிஞர்கள் வீ. ப. கா. சுந்தரம், புலவர் இரா. இளங்குமரனார், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார், கவியரசு முடியரசனார், பெரும்புலவர் தண்டபாணி தேசிகர், புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை உள்ளிட்ட அறிஞர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் சிறப்புநிலைப் பேராசிரியர்களாகப் பணிபுரியும் பேறு பெற்றார்கள். மேலும், பல்கலைக்கழக நல்கை ஆணையம் தமிழ்த் துறைக்குக் கணிசமான சிறப்பு நிதியுதவி நல்கியது.

***நூல்கள்***

ஆய்வியல், ஒப்பியல், சங்க இலக்கியம், நாட்டாரியல், இலக்கியக் கொள்கைகள் ஆகிய களங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். பல்வேறு நூல்களுக்கு இவர் உரையும் எழுதியுள்ளார். புதிங்கள் பலவும் அவர் படைத்துள்ளார். வாழ்வரசி, நச்சுவளையம், தாலாட்டு, காதல் வாழ்வு, பிறை தொழும் பெண்கள், சங்க இலக்கிய ஒப்பீடு- இலக்கியக் கொள்கைகள், சங்க இலக்கிய ஒப்பீடு- இலக்கிய வகைகள், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழியல் ஆய்வு, ஆய்வியல் அறிமுகம், ஒப்பிலக்கிய அறிமுகம், குறிஞ்சிப்பாட்டு இலக்கியத் திறனாய்வு விளக்கம், தொல்காப்பியம் உரை, நன்னூல் உரை, அகப்பொருள் விளக்கம் உரை, புறப்பொருள் வெண்பாமாலை உரை, யாப்பருங்கலக் காரிகை உரை, தண்டி யலங்காரம் உரை, சொல் புதிது சுவை புதிது, தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும், தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா

தடையாகுமா?, பேசுவது போல் எழுதலாமா? பேச்சுத் தமிழை இகழலாமா?, பிழை திருத்தும் மனப்பழக்கம், உரை விளக்கு, தமிழ் உயிருள்ள மொழி, தமிழ் கற்பிக்கும் நெறிமுறைகள், தமிழ்த்தவம், உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள், திருக்குறள் உரை, இனிய தமிழ்மொழியின் இயல்புகள், தமிழ் அறிவோம்! தமிழராய் வாழ்வோம்!, ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு, தமிழ்வழிக் கல்விச் சிந்தனைகள், எழுச்சி தரும் எண்ணச்சிறகுகள், தொல்காப்பிய இலக்கிய இயல், தேடவைக்கும் திருவள்ளுவர், தமிழ் ஒரு 'கட்டமைப்புள்ள' மொழி, செம்மொழிப் படைப்பியல், செவ்விலக்கியச் சிந்தனை கள், ஒப்பிலக்கியப் பார்வையில் சங்க இலக்கிய ஒளிச் சுடர்கள், வள்ளுவர் நெறியில் வாழ்வது எப்போது?, இனிய தமிழ் மொழியின் இருவகை வழக்குகள் முதலியன அவரது குறிப்பிடத் தக்க நூல்கள் ஆகும்.

*பெற்ற சிறப்புக்கள்*

1971 சனவரி 26 குடியரசு நாளில் புதுதில்லி அனைத்து இந்திய வானொலி நிலையத்தில் நடைபெற்ற கவியரங்கில் தமிழகத்தின் சார்பில் கலந்துகொண்டு **செல்வம்** என்னும் தலைப்பில் இவர் பாடிய கவிதை அனைத்து இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு ஒலிபரப்பப்பெற்றது. மதுரை **மீனாட்சியம்மை** பற்றிய இவரது கவிதைக்காக இவருக்குத் தமிழக அரசு பொற்கிழி அளித்துச் சிறப்பித்தது.

இவரது சிறந்த நூல்களுக்காகத் தமிழக அரசின் இரு பரிசுகளைப் பெற்றார். மேலும், தமிழக அரசின் **நல்லாசிரியர் விருது**, **திரு. வி. க. விருது** ஆகியன பெற்றார். குன்றக்குடி அடிகளார் பாரிவிழாவில் **கணக்காயர்** என்னும் மெய்க் கீர்த்திப் பட்டயம் அளித்துச் சிறப்பித்துள்ளார்.

*வகித்த பொறுப்புக்கள்*

சாகித்திய அகாதெமியில் பொதுக்குழு உறுப்பினர், தமிழ்த் துறைக் கருத்துரைக்கும் குழுவின் இயக்குநர் ஆகிய பொறுப்புக்களை வகித்துள்ளார். ஞானபீட விருதுக்குரிய கருத்துரைஞர் குழு, தமிழக அரசின் சங்க இலக்கியக் குறள்

பீடத்தின் துணைத் தலைவர், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் குழு, தமிழகப் புலவர் குழு, வளர் தமிழ் மன்றம் ஆகியவற்றில் உறுப்பினராகவும், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை செந்தமிழ்க் கல்லூரியின் ஆட்சிக் குழு உறுப்பினர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர் முதலிய பொறுப்புக்களையும் அவர் வகித்துள்ளார்.

***அயலகப் பயணம்***

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, சப்பான், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு அயல்நாடுகளில் தமிழ் முழக்கம் செய்த பெருமைக்கு உரியவர் அவர்.

***தொடர்புக்கு***


பேராசிரியர் முனைவர் **தமிழண்ணல்**
ஏரகம்
4/585 (732) சதாசிவ நகர்
வண்டியூர்ச்சாலை
மதுரை 625 020

நிலைபேசி: 0452-2533792
அலைபேசி: 9443064749

# குறிப்புக்கள்

## குறிப்புக்கள்



பழந்தமிழ்ப் பனுவல்களினின்றும் அரிதின் முயன்று தொகுத்த அரிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, ஆழ்ந்து ஆய்ந்து, தனித் தன்மையுடை சங்க இலக்கியங்களின் நனி தொன்மையினை அறுதியிடும் ஆணித்தரமான ஆதாரங்களைப் பேராசிரியர் தமிழண்ணல் இந்நூலில் முன்வைத்துள்ளார். சங்கப் பாடல்கள் கி.பி. ஐந்து, நான்காம் நூற்றாண்டுகளில் பாடப்பட்டவை என்பதை நிறுவ, அனைவரும் ஏற்கத்தக்க சான்றுகளை இந்நூலில் அவர் அளித்துள்ளார். மிகவும் இன்றியமையாது குறிப்பிடத்தக்க அகச் சான்றுகளை ஒருங்கே தொகுத்து ஓரிடத்தே அவர் தந்திருப்பது சங்கப் பாடல்களின் கால ஆய்விற்குப் பெரிதும் பயன்பட வல்லது. இந்த அகச் சான்றுகளும் புறச்சான்றுகளும் ஒன்றையொன்று வலுப்படுத்தும் வகையில் அமையும்போது சங்கப் பாடல்களின் கால வரையறை துல்லியமாகத் துணியப்பெறும். இந்நோக்கிலான ஆய்வுகள் காலத்தின் தேவை ஆகும். அத்தகு ஆய்வுகளுக்கு உந்து விசையாக இந்நூல் உதவும் என்பது உறுதி.

– வ. ஜெயதேவன்

NOKKU

4/1083, Second Main Road
Nehru Nagar, Kottivakkam
Chennai - 600 096.
Mobile : 9380626448